Registered as a NewsPaper

விலை ரூபா-8.00




ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 | திருவள்ளுவர் ஆண்டு- 2036 | மாசி-8 | 20-02-2005 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை -02

# அரசியலை புதிய பாதையில் இட்டுச் செல்ல கிடைத்த வாய்ப்பு தவறவிடப்பட்டு விட்டது

## சந்திரிகாவைச் சாடுகிறார் ரணில்

**சுனாமி அனர்த்தத்தின் பின்னர் நாட்டின் அரசியலை புதிய பாதையில் இட்டுச் செல்வதற்கு இருந்த சந்தர்ப்பம் கைநழுவிச் சென்றுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். இதன் மூலம் உரிய பலனைப் பெற்றுக் கொள்ள சனாதிபதியினால் முடியவில்லையெனவும் அவர் தெரிவித்தார்.**

ஒருங்கிணைந்த அரசியலுக்கான பாதை சுனாமியின் மூலம் ஏற்பட்டுள்ளதாகவும் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக் காட்டியுள்ளார். உடுத்தும்பறைப் பிரதேசத்தில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் அதிகார பீட கூட்டத்தின் போதே அவர் இதனைக் கூறியுள்ளார். உண்மையில் சுனாமிக்குப் பின்னர் ஒருங்கிணைந்த அரசியலை முன்னெடுக்கும் வாய்ப்பு

(12ஆம் பக்கம் பார்க்க)

# சிறிய உலங்குவானூர்தி எடுத்து வந்த தமிழர் மீது விமான நிலையத்தில் விசாரணை

(கொழும்பு)

ஜேர்மனியில் இருந்து இலங்கைக்கு வந்த ஒருவரிடம் இருந்து தன்னியக்க சிறியரக உலங்குவானூர்தி கைப்பற்றப்பட் டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 2 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. சுமார் 15 வருடங்களுக்குப் பின்னர் ஜேர்மனியில் இருந்து இலங்கைக்கு வந்த யாழ்ப்பாணம் கோப்பாயைச் சேர்ந்த ஒருவரிடம் இருந்தே இந்த உலங்கு வானூர்தி கைப்பற்றப்பட்டுள்ளது. இதனையடுத்து இரகசிய பொலிசாரால் ஜேர்மனில் இருந்து வந்தவர் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்.எனினும் குறிப்பிட்ட உலங்குவானூர்தி மீள வழங்கப் படவில்லை. (32)

# சுனாமியால் பாதிப்புற்றோருக்கு உதவ அரசு அரச ஊழியரிடம் நிதி அறவிடுவது தவறு

## ஜாதிகஹெல உறுமய அதிருப்தி

அரசாங்கம் சுனாமியின் பின்னரான புனரமைப்புக்காக அரசாங்க ஊழியர்களிடம் இருந்து நிதி சேகரிப்பை மேற்கொள்வது குறித்து ஜாதிக ஹெல உறுமய தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக தமது அதிருப்தியை வெளியிடும் பாராளுமன்ற உறுப்பினர் ஓமல்பே சோபித்த சுனாமியின் பின்னர் புனரமைப்புகளுக்காக அரசாங்கத்துக்கு ஏனைய நாடுகளில் இருந்து 20 ஆயிரம் கோடி ரூபா கிடைத்துள்ளது.

இதில் இருந்து அரசாங்கம் திட்டமிட்டதன் படி சேதமடைந்த 70 ஆயிரம் வீடுகளை புனரமைக்கவேண்டுமானால் வீடு ஒன்றுக்கு 5 இலட்சம் ஒதுக்கப்பட்டாலும் 3500 கோடி ரூபாவே செலவாகும்.

எனவே அரசாங்கத்திடம் சுமார்

(12ஆம் பக்கம் பார்க்க)

# மன்னார் நானாட்டான்பாடசாலை திறப்பு விழாவில் படையினர் கெடுபிடி

(மன்னார்)

மன்னார் நானாட்டான் ம.வித்தியாலய உயர் மாடிக்கட்டடத் திறப்பு விழாவிற்கு கவசவாகனம் சகிதம் பெருமளவிலான சிறிலங்கா படையினரும், பொலிசாரும் குவிக்கப்பட்டதால் மக்கள் மத்தியில் பதற்றம் ஏற்பட்டது. இதில் ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவர்கலந்து கொண்டமையாலேயே இந்நிலை ஏற்பட்டது.

நேற்று நடைபெற்ற இந்நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர், மாணவிகள், பெற்றோர் ஆகியோர் கடுமையாக உடற் சோதனை செய்யப்பட்ட பின்பே உட்செல்வதற்கு அனுமதிக்கப்பட்டனர். இதனால் மாணவர்கள், பெற்றோர் பதற்றமடைந்திருந்ததுடன், பெரும் விசனமடைந்து சிலர் வீட்டிற்கும் சென்றனர் மேலும் அங்கு படமெடுக்கச் சென்ற செய்தியாளர்கள் தடுக்கப்

(12ஆம் பக்கம் பார்க்க)

# சென்னையில் தரித்து நின்ற கப்பலில் ஆள்மாறாட்டம் செய்ததாக ஐவர் கைது

ஆள் மாறாட்டக் குற்றம் சுமத்தப்பட்டு சென்னை துறைமுகத்தில் தரித்து நின்ற இலங்கைக் கப்பலில் இருந்து 5 பேர் தமிழ்நாடு துறைமுகக் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இலங்கைக்கும் ஏனைய நாடுகளுக்கும் இடையில் ஆட்கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

புதுடில்லியில் இருந்து செயற்படும் இரண்டு கப்பல் வியாபாரிகள் பழுதடைந்த கப்பல்களை வர்ங்கி விற்கும் வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் அடிப்படையில் இவர்கள் இருவரும் அண்மையில் இலங்கையில் இருந்து பழுதடைந்த கப்பல் ஒன்றை இலங்கையர்கள் 8 பேருடன் பங்களா தேசத்துக்கு கொண்டு செல்லும் வழியில் சென்னை துறைமுகத்தில் தரித்து நின்று பழுது பார்த்தல் நடவடிக்கைகளை மேற் கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் இந்தக் கப்பலில் பயணம் செய்த 8 பேரையும் இறக்கிவிட்டு புதியவர்கள் 8 பேரை மீண்டும் இந்தக்கப்பலில் இலங்கைக்கு அழைத்து செல்லும் திட்டம் ஒன்றை குறிப்

(12ஆம் பக்கம் பார்க்க)

# சுனாமி முன்னெச்சரிக்கைகளை அதிகாரிகள் புறக்கணித்தனரா?

## விசாரணை நடத்த ஓய்வு பெற்ற நீதியாளர்கள்

சுனாமிப் பேரலைத் தாக்கம் குறித்த முன்னெச்சரிக்கைகளை அதிகாரிகள் எவராவது உதாசீனம் செய்தனரா? என்பது குறித்து விசாரணை நடத்த ஓய்வு பெற்ற நீதிபதிகளை நேற்று சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியமித்துள்ளார்.

ஓய்வு பெற்ற உயர் நீதி மன்ற, மேல் நீதிமன்ற நீதிபதிகளை இது குறித்து நியமித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது குறித்த அவர்கள் காலநிலை புவிச் சரிதவியல் அதிகாரிகளிடம் விசாரணை நடத்துவர்.

இப்பொழுது இலங்கையிலுள்ள முன் எச்சரிக்கைக் கருவியினை தொடர்பாகவும், எதிர்காலத்தில் முன்னெச்சரிக்கைக் கருவியினை பெறுவது தொடர்பாகவும் இவர்கள் விசாரணை மேற்கொண்டு சனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளனர்.

## விசுவமடுப் பகுதியில்

# மனைவியை அடித்துக் கொன்று தூக்கிலிட்ட கணவன் கைது

பெண்ணொருவர் கணவனால் அடித்துக் கொலை செய்யப்பட்ட பின் தூக்கிலிடப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:நேற்றுப் பிற்பகல் இரண்டு மணியளவில் கணவன், மனைவி இருவருக்குமிடையே ஏற்பட்ட குடும்பத் தகராரையடுத்து மனைவியை அடித்துக் கொலை செய்த பின் உடலை வீட்டுக் கூரை வளையில் கட்டி தூக்கிலிட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

தூக்கிலிடப்பட்ட பின் மனைவியின் சகோதரியிடம் மனைவியைத் தூக்கிலிட்டு விட்டேன் போய்ப் பார்க்குமாறு கூறி விட்டு இவர்களின் 4 வயதுக் குழந்தையையும் அழைத்துக் கொண்டு தலைமறைவாகி முற்பட்ட வேளை விசுவமடு காவல்துறையினருக்கு கிடைத்த தகவலையடுத்து இந்நபர் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இதேவேளை கொலையுண்ட ஒரு

(12ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் நிகழ்வுகள்

(கொழும்பு)

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள போர் நிறுத்த உடன்படிக்கை எதிர் வரும் 22 ஆம் திகதி 3 வருடங்கள் நிறைவு பெறுவதாக நோர்வேயின் இலங்கைக்கான தூதரகம் அறிவித்துள்ளது. இந்த 3 ஆண்டு நிறைவு நாள் நினைவுகளை பல அமைப்புக்கள் கொழும்பில் ஏற்பாடு செய்துள்ள தாகவும் அந்த நிகழ்வில் விசேட சமாதானத் தூதர் எரிக் சூல்ஹெய்ம் பங்கு கொள்வார் என நோர்வேயின் இலங்கைக்கான தூதரகம் அறிவித்துள்ளது. (32)

# சிறில.அமெரிக்காவிடம் வாங்கிய கரேஜஸ் கப்பல் இல. வருகின்றது

அமெரிக்க கரையோரக்காவற்படையின் பாவனையிலிருந்த கரேஜஸ் எனும் பெயருடைய தற்போது"பி.621" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்ட கப்பல் நேற்று வேர் ஜீனியா துறைமுகத்திலிருந்து புறப்பட்டுள்ளது.

இதனை வழியனுப்பிவைக்கும் சமய நிகழ்வில் அமெரிக்கப் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள்,கடற்படை அதிகாரிகள், கரையோரக் காவல் படையினர் அதிகாரிகள், அமெரிக்காவிலுள்ள இலங்கைத் தூதுவர் சுபசிங்கா, சிறிலங்காவின் கடற்படைத் தளபதி சார்பில் பங்கேற்ற பிரதிநிதி ரியர் அட்மிரல் வசந்த கருணா கொட பிரிகேடியர் ரொகான் ஜயசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வரிவிளம்பரம்

### சான்றிதழ் வழங்கல்

NITM-COMPUTER TRAINING CENTRE- புதுக்குடியிருப்பு- எமது நிறுவனத்தில் பயிற்சியை முடித்துக்கொண்ட ஒருதொகுதி மாணவருக்கான சான்றிதழ் இன்று 20/02/2005 மாலை3மணிக்கு வழங்கப்படவுள்ளது.Director (5692)

## வரிவிளம்பரம்

EP.GL0423 என்னும் NO தகடு புதுக்குடியிருப்பில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மதி உணவகத்தில் ஒப்படைக்கவும். சன் மானம் வழங்கப்படும். (5693)

### தவறிவிட்டது

முள்ளியவளை 3 ஆம் வட்டாரத்தை சேர்ந்த கந்தசாமி பாஸ்கரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் M.R.S போக்குவரத்து அனுமதி அட்டை யும் மணிபேஸ் ஒன்றும் முள்ளியவளைகளும் தண்ணீர் ஊற்றுக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ் உள்ள முகவரியில் ஒப்படைக்கவும். தகவல்:-பாஸ்கரன், 3ஆம் வட்டாரம், முள்ளியவளை. (5688)

### தவறிவிட்டது

6ஆம் வட்டராம் சிவநகர் புதுக்குடியிருப்புபைச் சேர்ந்த ச.தெய்வநாயகியின் தேசிய அடையாள அட்டையுடன் பேஸ் 05.11.2004 அன்று புளியங்குளத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். (5694)

### சிற்ப ஆக்கப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.தேசியக் கல்வியற் கல்லூரியின் சித்திரக்கலைத் துறையினரால் சிற்ப ஆக்கப் போட்டி ஒன்று நடாத்தப்படவுள்ளது. பாடசாலை மாணவர்கள் மட்டத்திலும், மாணவர் தவிர்ந்த ஏனைய ஆர்வலர்கள், ஆக்க கருத்தாக்கள் மட்டத்திலும் என இரண்டு பிரிவுகளாக இப் போட்டி நடத்தப்படவுள்ளது. சமகால நிலவரங்களைக் கருப்பொருளாகக் கொண்ட இப் போட்டிக்கான ஆக்கங்களை வரும் 25 ஆம் திகதிக்கு முன் கல்வியற் கல்லூரியில் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. வடிவமைக்கப்படும் சிற்பங்கள் நீண்டகாலம் பேணிப் பாதுகாக்கவேண்டிய மூலப் பொருட்களால் வடிவமைக்கப்படுவது அவசியம். (33)

-விசுவமடுப் பிரதேசத்தில்-

# வீதிப்போக்குவரத்து விதிகளை மீறுவோர் மீது காவல்துறை நடவடிக்கை

வீதிப் போக்குவரத்து விதிகளை மீறப் பயணம செய்வோர் மீது விசுவமடு காவல் பணிமனையினர் கடும் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

விசுவமடுப் பிரதேசத்தில் ஈருருளி , உந்துருளிகளில் பயணிப்பவர்கள் பக்கம் பக்கமாக செல்வதும் உந்துருளிகளில் மூவர் பிரயாணம் செய்வதும் தடை செய்யப்பட்டுள்ளதுடன் இதனை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு குற்றப்பணம் அறவிட்டு வருகின்றனர். வீதி ஒழுங்கு அமைவாக பிரயாணத்தை மேற்கொள்ளுமாறு விசுவமடு காவல் பணிமனையினர் கேட்டுக் கொள்கின்றனர். (46)

# பூநகரி வடக்குப் பகுதியில் பாணுக்குத் தட்டுப்பாடு

(பூநகரி)

பூநகரி பிரதேச செயலர் பிரிவின் வடபகுதியில் பாணுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. செம்பன குன்று, பல்லாய் தெளிகரை, நாலாம் கட்டை, தம்பிராய், சாமிப் புலம், ஆலங்கேணி, நல்லூர், செல்விபுரம், கறுக்காய்த்தீவு, ஞானிமடம், சித்தன்குறிச்சி, மட்டுவில்நாடு, அத்தாய், பள்ளிக்குடா, பரமன்கிராய், வில்லடி, கௌதாரி முனை, வினாசியோடை ஆகிய இடங்களிலேயே பாணுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது.

இப்பகுதிக்கு பூநகரி ப.நோ. கூ. சங்க வெதுப்பக பாண் ஜெயபுரத்தில் இருந்து வருகின்றது. அத்துடன் பள்ளிக்குடா, சுயா வெதுப்பகப் பாணும் வந்து கொண்டிருந்தது. தற்பொழுது மாத் தட்டுப்பாடு காரணமாக சுயா வெதுப்பகத்தில் பாண் போடுவதில்லை ஆனால் தற்பொழுது அறுவடை காலமாக இருப்பதால் அதிகளவு பாண் தேவைப்படுகின்றது. இதனால் மக்கள் பல சிரமங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது. (34)

# வீதியில்கிடந்த தங்கச் சங்கிலி உரியவரிடம் ஒப்படைப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கனகபுரம் "அம்டா" நிறுவனம் அமைந்துள்ள வீதியில் இருந்து கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் விளம்பரப் பணிமனையில் ஒப்படைக்கப்பட்ட தங்கச் சங்கிலி ஒன்று உரியவரிடம் கையளிக்கப்பட்டது.

அவசர தேவைக்கென அடைவு பிடிக்கும் நிலையத்திற்கு செல்வதற்கென ஒருபவுண் தங்கச் சங்கிலியினை சட்டைப் பையில் வைத்துக் கொண்டு சென்ற பொழுது சட்டைப்பையில் ஏற்பட்டிருந்த ஓட்டை மூலம் மேற்படி சங்கிலி வீதியில் விழுந்து விட்டது.

மேற்படி வீதியில் கிடந்த தங்கச் சங்கிலி அவ்வீதியால் பயணித்த ந.ரவிச்சந்திரன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் விளம்பரப் பணிமனையில் உரியவர்களிடம் கிடைகக வழிசெய்யும் வண்ணம் ஒப்படைக்கப் பெற்றது.

கடந்த வியாழக்கிழமை தங்க நகையினை தவறவிட்ட நபர் உரிய ஆவணங்களுடன் ஈழநாதம் பணிமனைக்கு சமுகம் கொடுத்து ஆதாரத்தினை காட்டி நகையினைப் பெற்றுக் கொண்டதுடன் தவறிவிட்ட நகையினை எடுத்துக் கொடுத்த ந.ரவிச்சந்திரன் என்பவரது தாராளமனப்பான்மையினைப் பாராட்டிச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

–விசுவமடு ப.நோ.கூ. சங்கம்–

# புதிய கிராமிய வங்கி கிளை திறப்பு விழா

(உடையார்கட்டு)

விசுவமடு விவசாயிகள் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் புதிய கிராமிய வங்கிக்கிளை திறப்பு விழா நேற்று முன்தினம் பகல் 12.00 மணிக்கு விசுவமடு விவசாயிகள் ப.நோ.கூ.ச தலைவர் பத்மநாதன் தலைமையில் இடம் பெற்றது.

புதிய கிராமிய வங்கி கிளை திறப்புவிழா நிகழ்விற்கான மங்கல விளக்கினை விசுவமடு மாவீரர் துயிலுமில்லப் பொறுப்பாளர் சீதாராம் ஏற்றிவைக்க தமிழீழ தேசியக் கொடியினை விசுவமடு பிரதேச அரசியல்துறைப்பொறுப்பாளர் சுடர் ஏற்றிவைத்தார். கூட்டுறவுக் கொடியை ப.நோ.கூ.சங்க பொது முகாமையாளர் சதானந்தன் ஏற்றினார்.

கிராமிய வங்கியை முல்லை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சிவமயம் திறந்து வைக்க, பெயர்ப்பலகையை கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. புவனேஸ்வரன் திரை நீக்கம் செய்தார். விசுவமடு ப.நோ.கூ சங்கத்தின் தொழிற்பரப்பில் வசிக்கும் பலதரப்பட்டோரின் சேமிப்புபழக்கத்தை அதிகரிக்கும் நோக்குடன் புதிதாகத் திறந்து வைக்கப்பட்டுள்ள கிராமிய வங்கி திறப்பு விழா நிகழ்வில் கருத்துப் பகிர்வினை கிளிநொச்சி மாவட்ட பெண்கள் மேம்பாட்டுக் குழுத் தலைவர் திருமதி. காசிநாதன், விசுவமடு ப.நோ.கூ.சங்கத்தைச் சேர்நத முருகவேள் ஆகியோர் வழங்க சிறப்புரையினை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சிவமயம் ஆகியோர் வழங்கினர். (19,14)

# நெஞ்சு கனக்கும் நினைவுகள் கவிதைத் தொகுப்பு அறிமுகவிழா






(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர்களின் நெஞ்சு கனக்கும் நினைவுகள் கவிதைத் தொகுப்பு அறிமுக விழா நேற்றுக் காலை 10.30 மணியளவில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவ ஒன்றியத் தலைவர் எஸ்.செல்வக்குமார் தலைமையில் இடம் பெற்றது. இந்நிகழ்வின் முதன் நிகழ்வாக பொதுச்சுடரினை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ், தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். அதனைத் தொடர்ந்து தமிழீழத் தேசியக்கொடியை தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார். வாழ்த்துரையை தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து அறிமுக உரையை யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளரும், சட்டத்தர்ணியுமான பூலோகசிங்கம் நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து நூலின் முதற் பிரதியை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ் வெளியிட்டு வைக்க. விஞ்ஞான அக்கடமி ஆசிரியர் சராபுவனேஸ்வரன் பெற்றுக் கொண்டார். சிறப்புப் பிரதிகளை தமிழீழ அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் தங்கன், யாழ்.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி, தமிழீழ மாணவர் அமைப்பு பொறுப்பாளர் நளன் ஆகியோர் வழங்கினர். தொடர்ந்து மதிப்பீட்டுரையை உயர் தொழில் நுட்பக்கல்லூரி விரிவுரையாளர் சாந்தன் நிகழ்த்தினார். அதனைத் தொடர்நது சிறப்புரையை துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி ஆகியோர் நிகழ்த்தினர். அதனைத் தொடர்நது ஏற்புரையை பல்கலைக்கழக மாணவனும் இத்தொகுப்பில் கவிதைகளை எழுதியவருமான கோகுலன் நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து இந் நூலிற்கு கவிதைகளை எழுதிய பல்கலைக்கழக மாணவர்களுக்கு பதக்கங்கள் வழங்கிக் கௌரவிக்கப் பட்டன. (36)

# கட்டட அடிக்கல் நாட்டலும் மண்டபத்திறப்பு விழாவும்


இருமாடிக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவும் மண்டபத் திறப்பும் கடந்த திங்கட்கிழமை கறுக்காய்த்தீவு ம.வி.இல் பிற்பகல் 1.00 மணிக்கு ஆரம்பமானது.

அடிக்கல்நாட்டு நிகழ்வை அரச அதிபர் ஆரம்பித்து வைக்க, 2 ஆவது கல்லை வலயக் கல்விப் பணிமனையின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் மா.பத்மநாதன் நாட்டி வைக்க, தொடர்ந்து கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி..கணபதிப்பிள்ளை நாட்டி வைத்தார். தொடர்ந்து பலர் நாட்டி வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து மங்கல விளக்கேற்றல் இடம் பெற்றது. மங்கல விளக்கை அரச அதிபரும், பிரதிக் கல்விப் பணிப்பாளரும். ஏற்றிவைத்தனர். தொடர்ந்து தேசியக் கொடியேற்றல் நிகழ்வு இடம் பெற்றது. மண்டபத்தை பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாடாவைவெட்டித் திறந்து வைத்தார்.

சிறப்புரைகளை அரச அதிபர் கோட்டக்கல்விப் பணிப்பாளர், பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஆகியோர் ஆற்றினர். (34)

# சாவு அறிவித்தல்



### கந்தையா இராசரத்தினம்
### [சின்னராசா]

மட்டுவில் நாடு மேற்குப் பூநகரியை வசிப்பிடமாகக் கொண்டவரான கந்தையா இராசரத்தினம் (சின்னராசா) 18.02.2005 இல் காலமானார். இவர் காலம் சென்ற வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும், நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட சேர்த கந்தையா பொன்னம்பலம் என்பவரது சகோதரரும் ஆவார். அன்னார் சிவானந்தன்(ஜேர்மனி), கலானந்தன்(ஜேர்மனி), திலகரஞ்சனி(பூநகரி), திசையானந்தன்(டென்மார்க்), கருணாநந்தன்(ஜேர்மனி), சிவரஞ்சனி(ஜேர்மனி), செல்லரஞ்சனி(டென்மார்க்) ஆகியோரின் தந்தையுமாவார். அன்னார் குகழியா, தவச்செல்வி, சுதா(தனியார் பேருந்து உரிமையாளர்), வத்னி, பத்மினி, சிவசுந்தரம், கரன், ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பின்னர் அறி விக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

தகவல்:-சி.சுதா,
(மருமகன்)
தனியார் பேருந்து உரிமையாளர்.

(சி.5756)

# சனநாயகத்தைக் காக்கவே அரசாங்கத்தை கைப்பற்றினேன்

# நேர்மையான முறையில் விரைவில் தேர்தல் நடத்துவேன்

*–நேபாள மன்னர் நாட்டு மக்களுக்கு அறிவிப்பு*

(காத்மண்டு)

**நாட்டில் சனநாயகத்தை காப்பாற்றவே அரசாங்கத்தைக் கைப் பற்றினேன். அமைதியும், பாதுகாப்பும் காப்பாற்றப்பட நேர்மையான முறையில் தேர்தல் நடத்தப்படும் இதன் மூலம் நேபாளம் பல கட்சி முறைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது என நேபாள மன்னர் ஞானேந் திரா அறிவித்துள்ளார்.**

நேபாளத்தில் சனநாயக தினத்தை முன்னிட்டு நாட்டு மக் களுக்கு எழுத்து மூலம் விடுத் துள்ள செய்தியில் மன்னர் ஞானேந்திரா இது குறித்து மேலும் கூறியிருப்பதாவது;நேபாளத்தில் 55 ஆவது சனநாயக தினம் கொண் டாடப்படுவதையொட்டி அரசியல் கட்சிகள் போராட்டம் நடத்துகின் றன. ஆட்சி கலைப்புக்கு எதிராக நடத்தப்படும் போராட்டம் தேவைய ற்றது. நாட்டில் சனநாயகத்தை காப்பாற்றவே அரசாங்கத்தைக் கைப்பற்றினேன். நேபாளத்தில் அமைதியும், பாதுகாப்பும் காப்பற் றப்பட் நேர்மையான முறையில் விரைவில் தேர்தல் நடத்தப்படும்.

இந்த ஆட்சிக் கலைப்பு மூலம் நேபாளம் பல கட்சி ஆட்சி முறை க்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. பல கட்சி ஆட்சி மூலம் நாட்டில் அமைதியும், பாதுகாப்பும் நிலைத்து நிற்கும். நல்ல கொள்கைகள் நல்ல ஆட்சிக்கு வழிவகுக்கும் இதன் மூலம் சனநாயகம் வலுப் பெறும்.

சனநாயக நாட்டில் மக்கள் நலனுக்காகவே ஆட்சி நடத்தப்படும் சனநாயக ஆட்சி மலர நடவ டிக்கைகள் எடுக்கப்படும். இவ் வாறு தனது செய்தியில் மன்னர் ஞானேந்திரா கூறியுள்ளார்.

எனினும் அவர் தேர்தல் திகதியை அறிவிக்கவில்லை. சன நாயக தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் 4 அரசியல் கட்சிகள் மன்னர் ஞானேந்திராவின் ஆட் சிக்கு எதிராகப் போராட்டம் நடாத்தி னர்.



சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கான விஜயத்தை மேற் கொண்டுள்ள அமெரிக்காவின் முன்னாள் சனாதிபதிகளான ஜோர்ச் டபிள்யூ புஷ் மற்றும் பில் கிளின்டன் தாய்லாந்திற்கு விஜயம் செய்த வேளை.



தென் மேற்கு லண்டனில் வேட்டை நாய்கள் சகிதம் வேட் டைக்குச் செல்லும் குழுவினர்.

## குழந்தைகளுக்கும் 'குங்பூ' பயிற்சி

சீனாவில் பள்ளிக்கூடங்களில் உடற்பயிற்சி கட்டாயமாக்கப் பட்டுள்ளது. கராத்தே, குங்பூ போன்ற பயிற்சிகளையும் மாணவ மாணவிகள் சிறுவயதிலேயே கற்க ஆர்வம் காட்டுகிறார்கள்.

வடமேற்குப் பகுதியில் உள்ள சாங்சி மாகாணத்தில் கடும் பனிப் பொழிவு ஏற்பட்டுள்ளது. இந்தப் பனிப்பொழிவையும் பொருட்படுத் தாமல் சியான் சதுக்கத்தில் சிறுவர் சிறுமிகள் 'குங்பூ' பயிற்சியில் ஈடுப டுகின்றனர்.

## படையினரின் பல்வேறு தாக்குதல்களில் 40 மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் பலி

(காத்மாண்டு)

பாதுகாப்பு படையினருக்கும் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுக்கும் கடந்த மூன்று நாட்களாக பல்வேறு இடங்களில் நடந்த மோதலில் 40 மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் கொல லப்பட்டனர். இது குறித்து நேபாள இராணுவத் தரப்பில் கூறப்பட்டி ருப்பதாவது;

நேபாளத்தின் மேற்கு பகுதி யில் உள்ள ரோல்ப்பா மாவட் டத்தின் குரேலி பகுதியில் பாது காப்பு படையினர் நடத்திய அதிர டித் தாக்குதலில் 25 மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் கொல் லப்பட்டனர். அந்தப் பகுதியில் 800 தீவிரவாதிகள பதுங்கியிருப்பதாக வந்த தகவலையடுத்து பாதுகாப்பு படையினர் விரைந்து சென்று சுற்றி வளைத்து தாக்குதல் நடத்தினர்.

மற்றொரு தாக்குதல் சம்பவம் பைட்டாடி மாவட்டத்தில் டெஹ் ராத்தம் பகுதியில் நடந்தது. இதில் இரண்டு தீவிரவாதிகள் கொல்லப் பட்டனர். அதே பகுதியில் குண்டு வெடித்து மற்றொரு தீவிரவாதியும் கொல்லப்பட்டார். நேபாளத்தின் கபில வஸ்த்து மாவட்டத்தில் நடந்த மற் றொரு சம்பவத்தில் 10 இற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கொல் லப்பட்டனர்.

**உள் விவகாரத்தில் தலையிடப் போவதில்லையென**

## அமெ. உறுதியளித்தால் அணுவாயுத நடவடிக்கையை வடகொரியா கைவிடும்

*வடகொரிய தூதுவர் தெரிவிப்பு*

வடகொரியாவுடன் சமாதான சக வாழ்வை ஏற்படுத்தி அதன் உள் விவகாரத்தில் தலையிடப் போவதில்லை என்ற உறுதி மொழி அமெரிக்காவினால் வழங்கப் பட்டால் மட்டுமே வடகொரியா அணுவாயுத நடவடிக்கைகளை கைவிட்டு ஆறு நாடுகள் கலந்து கொள்ளும். மாநாட்டில் மீண்டும் கலந்து கொள்ளுமென ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் வடகொரிய தூதுவர் தெரிவித்துள்ளார்.

இம் மாதம் பத்தாம் திகதி வட கொரியா அணுவாயுதங்கள் உற் பத்தி செய்துள்ளதாகவும், ஆறு நாடுகள் பங்கு பற்றும் பேச்சு வார்த்தைகளில் இருந்து அந் நாடு விலகுவதாகவும் தெரிவித்தி ருந்தது. அதனைத் தொடர்ந்து வட கொரியா அணுவாயுத விவகாரம் தொடர்பாக ஏற்கனவே சிக்க லடைந்துள்ள பேச்சுக்களில் ஸ்தம் பித நிலை ஏற்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.

## வெளிநாட்டு மாணவர்களின் வருகை அமெரிக்காவில் குறைகிறது


(வோஷிங்டன்)

மாணவர்களுக்கான அமெரிக்க விசா வழங்குவதில் இருந்த கால தாமதம் வெகுவாக குறைக்க ப்பட்டுள்ளதாக அமெரிக்க வெளி யுறவு மற்றும் உள்நாட்டு பாது காப்புத்துறை அமைச்சக அறிக்கை தெரிவிக்கிறது.

இருப்பினும் வெளிநாட்டு மாண வர்களின் எண்ணிக்கை குறைந் துள்ளதாகவும் அந்த அறிக்கை கூறுகிறது. இந்தியா, சீனா ஆகிய நாடுகளில் இருந்துதான் உயர் கல்விக்காக அமெரிக்காவுக்கு அதிகளவில் மாணவர்கள் வரு வார்கள். ஆனால் தற்போது அந் நாடுகளிலேயே சிறந்த உயர் கல்வி கிடைப்பதால் அமெரிக்காவுக்கு வரும் மாணவர்கள் எண்ணிக்கை குறைந்துள்ளதாக இந்த அறிக்கை கூறுகிறது.

மேலும் பிரிட்டன், அவுஸ் திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகள் தங்களது கல்வித் திட்டங் களுக்கான சலுகைகள் அதிக ளவில் அளிப்பதால் வெளி நாட்டில் படிக்க விரும்பும் மாண வர்கள் அங்கு செல்வதாகவும் அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

சாதாரணமாக மாணவர் விசா வழங்க எடுக்கப்பட்ட கால அவ காசம் 67 நாட்களிலிருந்து இரு வாரங்களாகக் குறைக்கப் பட்டுள்ளது. இருப்பினும் தங்களு டைய பாடத்திட்டங்கள் குறித்து அமெரிக்க பல்கலைக்கழகங்கள் விரிவான விளம்பரங்களை செய்ய வேண்டும். மற்ற நாட்டு மாண வர்களை ஈர்க்கும் வகையில் பாடத் திட்டங்கள் அமைய வேண் டும் என்றும் அறிக்கை கூறுகிறது.



ஈராக் புனித நகரான கபாலில் இமாம் அல்கசின் பள்ளி வாசலில் வெள்ளிக்கிழமைத் தொழுகையில் ஈடுபடும் சியா முஸ்லிம் மக்கள்.

## 33 வெளிநாட்டவர் சிங்கப்பூரில் கைது

(சிங்கப்பூர்)

இந்தியா, வங்களாதேசம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 33 பேரை சிங்கப்பூர் அதிகாரிகள் கைது செய்தனர்.

சிங்கப்பூரில் கள்ளத்தனமாக குடியேறியதற்காக அவர்கள் கைது செய்யப்பட்டனர். 33 பேரும் 24 முதல் 59 வயதிற் குட்பட்டவர்கள் அனைவரும் ஆண்கள் அவர்கள் அனைவரு க்கும் 6 மாதம் சிறைத் தண்ட னையும், 3பிரம்படித் தண்ட னையும் கிடைக்கலாம். கடந்த ஆண்டு மட்டும் கள்ளத் தன மாகக் குடியேறியதாக 11 ஆயிர த்து790 பேர் கைது செய் ப்பட் டனர்.



நிக்கோபாரில் சுனாமியாற் பாதிக்கப்பட்டு பிளேயரில் நிவாரண முகாம்களிற் தங்கி இருக்கும் பாடசாலைச் சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்ல காத்து நிற்கின்றனர்.

## ஆப்கானில் கடும் பனி; உணவுப் பற்றாக்குறை; பல்வேறு நோய்களால் 1000 குழந்தைகள் சாவு

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் கடும் பனி யால் பலவித நோய்களால் பாதிக்கப்பட்டும் உணவுப் பற்றாக் குறையாலும் 1000 குழந்தைகள் வரை இறந்திருக்கக்கூடும் என அஞ்சப்படுகின்றது.

ஆப்கானிஸ்தானின் மேற்குப் பகுதியில் கடும் குளிர் நிலவி வரு கின்றது. "ஆயிரம் குழந்தைகள் வரை இறந்திருக்கலாம் என்ற மதிப்பீடே குறைவானதுதான்" என் கிறர் கத்தோலிக்க மறுவாழ்வு சேவைத் திட்ட இயக்குனர் பால் ஹிக்ஸ்.

கார் மாகாணம் பனிப்புயலால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் மிகவும் குளிரான சூழல் இப்போதுதான் நிலவுகின்றது. கடும் பனி காரண மாக பல இடங்களுக்கு உதவிப் பொருட்கள் சென்றடைய முடிய வில்லை.

கடந்த மாதத்தில் மட்டும் கடும் பனி காரணமாக 267 பேர் இறந் ததாக ஐக்கிய நாடுகள் சபை மற் றும் ஆப்கான் அதிகாரிகள் தெரி வித்தனர். இவர்களில் பெரும் பாலானோர் குழந்தைகள். மேலும் பலர் தவித்துக் கொண்டுள்ளனர்.

ஏற்கனவே நீண்ட காலமாக வறட்சி காரணமாக உணவுப் பற் றாக்குறையால் தவித்த குழந்தை கள் தற்போது கடும் பனி காரண மாகவும் உணவு இல்லாததாலும் இறந்து விட்டனர்.

# சுனாமியால் பாதிப்புற்ற கள்ளப்பாடு மக்களுக்கு இன்று தற்காலிக குடியிருப்புக்கள் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

**சுனாமிப் பேரலையின் தாக்கத்தினால் இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழ்கின்ற கள்ளப்பாடுக் கிராம மக்கள் இன்று தற்காலிக முகாம்களில் குடியமர்த்தப்படுகின்றனர்.**



உண்ணாப்பிலவுப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக முகாமின் ஒரு பகுதியினைப் படத்தில் காணலாம். (படம் சசி)

மேற்படி அனர்த்தத்தினால் இடம் பெயர்ந்து நலன் புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டு இரண்டு மாதங்களை எட்டுகின்ற நிலையில் இன்று உண்ணாப் புலவுப் பகுதியில் அமைக்கப்பட்ட தற்காலிக முகாம் களில் குடியமர்த்தப்படுகின்றனர்.

உண்ணாப்புலவுப் பகுதியில் முன்னர் அமைக் கப்பட்ட தற்காலிக குடில்கள் கால நிலைக்கு பொருத் தமற்றதென அகற்றப்பட்டு மீள அமைக்கப்பட்ட குடில் களில் முதற்கட்டமாக 100 குடும்பங்கள் இன்று குடிய மர்த்தப்படுகின்றன.

இவர்களுக்குப் பாவனைப் பொருட்களும், உதவிக் கொடுப்பனவும் வழங்கப்படவுள்ளன. இதேவேளை சிலாவத்தைப்பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் அன்னம்மாள் கோவிலடி முகாமில் முழுமையாகக் குடிய மர்த்தப்பட்டுள்ளனர். இச்செயற்பாடுகளில் முல்லைத்தீவு செயலணிக்குழுவினர் கடற்புலிகளின் அரசியல் துறை யினர் முல்லை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் முகுந்தன் மற்றும் உதவிவழங்கும் நிறுவனங்கள், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினர் ஆகி யோர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். (ச.கு)



கிளிநொச்சி முரசுமோட்டை புனித அந்தோனியார் றோ.க.த.வித்தியால யத்தில் நடைபெற்ற தரம் ஒன்று மாணவர்களுக்கான அறிமுக விழாவின்போது பாடசாலையில் இணைந்து கொண்ட சிறார்களைப் படத்தில் காணலாம் (படம். சோதி)

## க.பொ.த (உ/த) கணித, விஞ்ஞான மாணவர்களுக்கான கருத்தரங்கு

க.பொ.த (உ/த) கணித, விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கான (இரசாயனவியல் பாடத்திற்கான) செயலமர்வு பின்வரும் நேர அட்ட வணைப்படி நடைபெறும். 2005 பரீட்சை எடுக்கும் உரிய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தமிழீழ மாணவர் அமைப்புக் கேட்டுள்ளது.

22.02.2005 செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியிலும், 23.02.2005 புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியிலும் நடைபெறும்.

## மீனவர்களுக்கு அ.அட்டை வழங்க நடமாடும் சேவை

(வவுனியா செய்தியாளர்)

மீனவர்களுக்கான அடையாள அட்டை வழங்கும் நடமாடும் சேவை ஒன்று கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளதாக சிறிலங்காவின் கடற் றொழில் நீரியல் வள அமைச்சு அறிவித்துள்ளது.

படகு, மீன்பிடி உபகரணங்கள் போன்றவற்றை உறுதிப்படுத்தி சான்றுப்பத்திரமும் மீனவர்களுக்கான அடையாள அட்டையும் வழங்கும் நடமாடும் சேவை, வரும் 25 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு மன்னாரி லும், 26 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு கொக்கிளாயிலும், 27 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு கிளிநொச்சியிலும் இடம்பெறவுள்ளதாக கடற் றொழில நீரியல் வள அமைச்சு அறிவித்துள்ளது. (10)

## மல்லாவிப் பிரதேசத்தில் உணவு கையாளும் நிலையங்களில் சுகாதாரப்பிரிவினர் ஆய்வு

(மல்லாவி)

மல்லாவி பிரதேசத்தில் தமிழீழ சுகாதார சேவையினரும் மல்லாவி சுகாதார பரிசோதகரும் இணைந்து நேற்று முன்தினம் உணவு கையாளும் நிலையங்களில் ஆய்வுகள் மேற் கொண்டனர். அப்போது சுகாதார நடை முறைகளை பின்பற்றும் படி தனிநபர் சுகாதாரத்தைக் கடைப்பிடிக்கும் படியும் உணவு கையாளும் நிலையங்களில் உள்ள சுற்றாடல்களை துப்புரவாக வைத்திருக்கும் படியும் குளோரின் இடப்பட்ட சுத்தமான நீரைப் பயன்படுத்தும் படியும் அறிவுறுத்தினர்.

இனங்காணப்பட்ட உணவு நிலையங்களில் பழுதடைந்த உணவுப் பொருட் களான கழிவு மரக்கறி வகைகளை உடன் அகற்றுவதற்கான நடவடிக் கைகள் மேற்ணகொள்ளப்பட்டதுடன் உணவு நிலையங்களில் பழுதடைந்த உணவுப் பொருட்களை உடன் அகற்றினர். (24)

### பூநகரி வைத்தியசாலையில் பற்சிகிச்சை

(பூநகரி)

பூநகரி வைத்தியசாலையில் ஒவ்வொரு செவ்வாயும், வியா ழனும் பற்சிகிச்சை நடைபெறும் சிகிச்சை பெற விரும்புவோர் காலை 9.00 மணிக்கு வருகை தருமாறும் அத்துடன் பாடசாலை மாணவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து பற்சிகிச்சை நடை பெறுமெனவும் வைத்திய அதிகாரி சுதர்சன் தெரிவித்துள் ளார். (34)

## முஸ்லிம் குடும்பஸ்தர் துப்பாக்கிச் சூட்டில் காயம்

மட்டக்களப்பு மாவட்டம் ஓட்டமா வடியில் கடந்த வியாழனன்று முஸ்லிம் குடும்பஸ்தரொருவர் இனந்தெரியாத நபர்களினால் சுடப்பட்டுக் காயங்களுடன் மட்டக் களப்பு வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார்.

உதுமாலெப்பை சிராஜுதீன், (வயது 34) என்பவரே இந்தத் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கானதாக வாழைச் சேனைப் பொலிசார் தெரிவித்தனர். கடையொன்றில் நின்ற சமயம் ரி56 ரக துப்பாக்கி சகிதம் வந்த இனந் தெரியாத நபரொருவர் இந்தத் துப் பாக்கிப் பிரயோகத்தைச் செய்து விட்டு தப்பிச் சென்றுள்ளார். முஸ்லிம் ஆயுதக் குழுவொன்றே இந்த சம்ப வத்துடன் தொடர்புபட்டிருக்கலாம் எனப் பிரதேச மக்கள் கூறுகின் றார்கள்.

### வரவேற்பு நிகழ்வு

(உடையார்கட்டு)

தரம் ஒன்று மாணவர்களை வர வேற்கும் நிகழ்வு வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத் தில் கடந்த புதன்கிழமை காலை 9.00 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி மு.ஜெயகௌரி தலைமை யில் இடம்பெற்றது.

கனிஷ்ட உயர்தர வித்தியால யத்திற்கு 2005 தரம் ஒன்றில் கல்வி பயில சேர்க்கப்பட்ட மாணவர்கள் மலர்மாலை அணிவித்து வர வேற்கப்பட்டனர். (19)

## வானில் துரத்திச் சென்று புளொட் உறுப்பினர் சுடப்பட்டார்

புளொட் குழு உறுப்பினர் பயணம் செய்த வாகனம் மீது துப் பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை இரவு 8.20 மணியளவில் மேற்கொள் ளப்பட்ட இத்தாக்குதலில் படுகாய முற்ற இவர், வவுனியா பொது மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டுள்ளார். காயமடைந்தவர் பாபு எனும் பெயரைக் கொண்ட புளொட் உறுப்பினர் எனத் தெரி விக்கப்படுகின்றது. வவுனியாவி லிருந்து மதவாச்சி நோக்கிச் சென்று கொண்டிருந்த எல்ப் ட்றக் வாகனத்தைச் செலுத்திச் சென்ற மேற்படி நபர் மீது வானொன்றில் பின்னால் வந்தவர்களே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக விசாரணையின்போது தெரியவரு கின்றது என வவுனியா மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித் தார். பூவோயா பாலத்திற்கு அரு காமையில் வைத்தே இத்துப் பாக்கிப் பிரயோகம் மேற் கொள் ளப்பட்டதாகவும், சம்பந்தப்பட்ட வான் தப்பிச் சென்றுவிட்டதாகவும் பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவரு கின்றது. காயமடைந்த மேற்படி நபர் உடனடியாகவே வைத்திய சாலைக் குக் கொண்டு வரப்பட்டு சத்திர சிகிச்சை வழஙகப்பட்டதாக வைத்தி யசாலை அத்தியட்சகா தெரிவித் தார். சிங்களப் பகுதியில் இடம் பெற்ற இச்சம் வத்திற்கான காரணம் இது வரை தெரிய வரவில்லை.

### கலந்துரையாடல்

(மல்லாவி)

மல்லாவி அரசியல்துறைச் செயலகத்தில் 2005 ஆம் ஆண்டுக் கான வேலைத்திட்டங்கள் சம்பந்த மான கலந்துரையாடல் எதிர்வரும் 22.02.2005 காலை 9.00 மணிக்கு மல்லாவி அரசியல்துறைச் செயல கத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் அரச ஊழியர்கள், அரசசார்பற்ற பிரதிநிதிகள் பொது அமைப்புக்கள், கமக்கார அமைப்பு கள் பிரதிநிதிகள் கலந்து கொள்ளு மாறு அப்பகுதி அரசியல்துறைப் பொறுப்பாளர் கேட்டுள்ளார். (24)

## லெபனான் பணிப்பெண்ணின் மரணத்தில் சந்தேகம் வவுனியா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்கு ஏற்பாடு

(வவுனியா செய்தியாளர்)

லெபனானில் பணிப் பெண் ணாகக் கடமையாற்றிய வவுனி யாவைச் சேர்ந்த பெண் ஒருவரின் சடலம் கடந்த வியாழக்கிழமை கணவனிடம் ஒப்படைக்கப்பட்டுள் ளது.

செட்டிகுளம், முதலியார் குளத் தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான கலாதேவி அருச்சுணர் (வயது-36) என்பவர் கடந்த சனவரி மாதம் 30ஆம் திகதி இறந்து விட்டதாக லெபனானில் இருந்து கணவருக்குத் தகவல் தெரிவிக்கப் பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து சடலம் கணவரிடம் ஒப்படைக்கப் படுவதற்காக வவுனியாவிற்கு கொண்டு வர முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வவுனியாவிற்கு கொண்டு வரப்பட்டு கணவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்தம் தொடர்பான செய்தி அறிந்தமை யால் ஏற்பட்ட மாரடைப்பினாலேயே இப்பெண் இறந்ததாகக் குறிப்பிடப் பட்டு, சடலத்தைப் பார்வையிட வேண்டாம் எனவும் குறிப்பிடப் பட்டு சடலம் வைக்கப்பட்டுள்ள பெட்டி சீல் வைக்கப்பட்டுள் ளது. இதனால், உண்மை நிலை அறிய விரும்பிய கணவர் சடலத் தைப் பார்வையிட வவுனியாப் பொலி சாரிடம் அனுமதி கோரி யுள்ளார். இதனால், பிரேதப் பரிசோதனைக் காக வியாழக்கிழமை மாலை 4.00 மணியளவில் சடலம் வவுனியா பொதுவைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது. (10)

### புதிய நிர்வாகம் தெரிவு

(மல்லாவி)

துணுக்காய்ப் பிரதேசத்தில் அழககச் சங்கங்களின் 2005 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவுக் கூட்டம் நேற்று முன்தினம் காலை 10.00 மணிக்கு அரசியல் துறை பாரதி ஒன்று கூடல் மண்ட பத்தில் அழககச்சங்கத் தலைவர் ஆ.செல்வராசா தலைமையில் இடம்பெற்றது.

இதில் கருத்துரைகளை அப் பகுதி பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆ.செல்வன், நிர் வாகப் பொறுப்பாளர் செ.புனிதன் ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து புதிய நிர்வாகத் தெரிவு இடம் பெற்றது. தலைவராக சி.கேதீஸ் வரன், செயலாளர் மா.புஸ்பராசா, பொருளாளர் சி.அருள்சீலன், உப தலைவர் ஆ.செல்வராசா உபசெய லாளர் ஞா.அலன்றோஸ் ஆகியோ ருடன் ஆறு நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப் பட்டனர். (24)

## பாடசாலைகளுக்கு மாணவர்களை ஏற்றிச் செல்ல த.பு. கழகம் போக்குவரத்துச் சேவை

போக்குவரத்து வசதியற்று, பாடசாலைகளுக்குச் செல்ல முடி யாமல் தங்களுடைய எதிர்காலம் பற்றிக் கவலையடைந்த நிலையில் நலன்புரி நிலையங்களில் தங்கி வாழும் மாணவர்களின் நலன் கருதி தமிழர் புனர்வாழ்வுக் கழகம் போக்கு வரத்துச் சேவைகளை ஆரம்பித் துள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் சுனாமிப் பேரலை அனர்த்தத் தினால் பாதிக்கப்பட்ட மக்கள் வெவ் வேறு தற்காலிகமான இடங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர். இவர் கள் பாடசாலைகளிருந்து தூர இடங களில் குடியமர்த்தப்பட்டுள்ளதால், இங்குள்ள மாணவர்கள் பாடசாலை களுக்குச் செல்வதற்கு போக்கு வரத்து வசதியற்று பெரும் சிரமங் களுக்குள்ளாகியிருந்தனர். இதனையடுத்து. இம்மாணவர் களின் எதிர் கால நலன்கருதியும், கல்வி என்பது சிறுவர்களின் உரிமை என்ற அடிப்படையிலும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அம்பாறை மாவட்டத்திலுள்ள தற்காலிகக் குடியிருப்புக்கள் மற்றும் நலன்புரி நிலையங்கள் தோறும் வாகனங்களை அனுப்பி காலையில் மாணவர்களை பாடசாலைகளுக்கு ஏற்றிச் சென்று விடுவதுடன், பாடசாலைகள் முடிந்ததும் மீண்டும் மாணவர் களை அந்தந்தக் குடியிருப்புப் பகுதிகளிலும், நலன்புரி நிலையங் களிலும் கொண்டுசென்று விடு கின்ற சேவைகளைத் தொடர்ந்து வருகின்றது.

## சுவீடனின் அமைச்சர் குழு மட்டக்களப்பிற்கு விஜயம்

சுவீடன் நாட்டின் சர்வதேச அபிவிருத்திக்கான அமைச்சர் கரின் ஜாம்டின் மட்டக்களப்பிற்கான விஜயத்தை மேற்கொண்டார். இம் மாவட்டத்தில் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நாவலடிப் பிரதேசத்தைப் பார்வையிட்ட அவர், நலன்புரி நிலையங்களுக்கும் சென்று பாதிக்கப்பட்ட மக்களையும் சந்தித்தார். இதன் பின்பு மாவட்ட செயலகத்தில் சிவில் அதிகாரிகள், தொண்டர் அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்படப் பல்வேறு தரப்பினரையும் அவர் சந்தித்தார்.

# எங்கள் தேசியத் தலைமையின் வழிப்படுத்தலின் கீழ்

# எல்லோரும் இணைந்து நின்று போராடுவோம்

## பெண்கள் பண்பாட்டு மையம் அறைகூவல்

(யாழ்ப்பாணம்)

**எங்கள் தேசத்தின் தலை விதியை நிர்ணயிக்கும் விடுதலைப் போராட்டத்தில் மேலும் திடமாகக் கால்பதித்து முன்னேறுவோம்.நாம் எல்லோரும் இணைந்து நின்று எங்கள் தேசியத்தலைமையின் வழிப்படுத்தலின் கீழ் தொடர்ந்து முன்செல்வோம். எங்களது நிலைப்பாட்டை தென்னிலங்கையும் சர்வதேசமும் புரிந்து கொள்ள வேண்டும் எனப் பெண்கள் பண்பாட்டுமையம் லெப்.கேணல் கௌசல்யன் உள்ளிட்ட போராளிகளின் படுகொலையைக் கண்டித்து யாழ்ப் பாணத்தில் விடுத்துள்ள அறிக்கையில் அறைகூவல் விடுத்துள்ளது.**

மட்டு.அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் லெப்.கேணல் கௌசல்யன் உள்ளிட்ட அறுவர் படுகொலையைப் பெண்கள் பண்பாட்டு மையம் வன்மையாகக் கண்டிக்கிறது. அவர்களின் சாவுக்காய் எங் களது அஞ்சலிகளை ஆத்மார்த்தமாய்ச் செலுத்துகின்றோம்.

இந்தப் படுகொலைகளுக்குள் சிங்கள இனவாதத்தின் இன்னொரு குரூர முகத்தைக் கண்டுகொண்டோம்.

தமிழ் மக்களை வாழவிடாமல் தடுக்கும் சிங்கள இனவாதத்தின் ஒரு தொடர் முயற்சி தான் இது.

படுகொலைகளை யார் செய்தனர் என்பதனையும் தாண்டி இது தமிழ் மக்களைப் பலவீனப்படுத்த,அச்சமூட்ட எடுக்கப்பட்ட இன்னொரு நடவடிக்கை என்பதே எமது கருத்து.சர்வதேச சமூகமும் சிங்கள இன வாதத்தின் இந்தக் குரூரத் தன்மையைப் புரிந்துகொள்ளும் என்றும் நம்புகின்றோம்.

கடல்கோள் (சுனாமி) அனர்த்தத்தின் போதும் கூட தமிழ் மக்களை ஓரங்கட்டி ஒதுக்கித்தள்ளும் சிங்கள இனவாதத்தின் மனித நாகரிகமற்ற கோர முகத்தை நாம் கண்டோம். ஐ.நா பொதுச்செயலர் கொபி அனான் வடகிழக்கு மக்களைச் சந்திக்கக் கூடாது என்பதில் குறியாய் இருந்து தமிழர் தாயகத்திற்கான அவரது வருகையைத் தடுத்து அரச இயந்திரத்தின் கபட கைங்கரியங்கள் இந்தக் குரூரத்தை முழு உலகுக்கும் பறைசாற்றும் . இன்று அதே ஐ.நா பொதுச் செயலர் படுகொலைகளுக் குக் கண்டனம் தெரிவித்திருக்கிறார். அதை நாம் வரவேற்கிறோம்.

அவசரகாலச் சட்டங்களை அமுல் படுத்த இருப்பதும் இராணுவத்திடம் அனர்த்த நிவாரணப்பணிக்காக நிர்வாகத்தைக் கையளிக்க முயற்சிப்பதும், பொதுக்கட்ட மைப்பை உருவாக்குவதில் காட்டப்படும் இழுபறி நிலையும் தமிழ் மக்கள் தமக்கான அலுவல்களைத் தாங்களே பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயத் தேவையை எமக்கு மேலும் வலியுறுத்து கின்றது.

இந்த நிலையில் தான் இன்னும் எங்கள் தேசத்து மக்களின் வாழ்வியலை மேலும் பலவீனப்படுத்தவென்று எமது பாசத்துக்கு ரிய விடுதலைப் போராளிகள் மீது இவ்வாறானதொரு படுகொலைச் சம்பவம் நிகழ்த்தப்பட்டிருக்கின்றது என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமாதானப் போர்வையைப் போர்த்துக் கொண்டு மீண்டும் யுத்தத்தை தமிழ் மக்கள் மீது திணிப்பதற்கு அரசு தயாராகி வரு வதையே கௌசல்யன் படுகொலைச் சம்ப வம் எடுத்துக்காட்டி நிற்கின்றது. நெடுந்தீவு மக்கள் கண்டனம் தெரிவித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவருக்கு மகஜர் அனுப்பியுள்ளனர்.

மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட நான்கு போராளிகள், முன்னாள் பாராளுமன்ற உறுப் பினர் சந்திரநேரு ஆகியோர் படுகொலை செய்யப்பட்டமை போருக்கான சூழலை உரு வாக்கும் அரசின் திட்டத்தின் ஓர்அங்கமே இப்படுகொலைச்சம்பவம் அரசின் திட்டமிடப்பட்ட அநாகரிக செயற்பாடாகவே அமைகிறது என்பதில் ஐயமில்லை.

இந்தக் கோர நிகழ்ச்சியானது தமிழர்களாகிய எங்களைப் பெரும் அதிர்ச் சியிலும், ஆழ்ந்த துயரத்திலும் ஆழ்த் தியுள்ளது. ஈடுசெய்ய முடியாதுள்ள இந்த இழப்பிற்கு அரசு எந்த வகையிலும் நியாயம் கற்பிக்க முடியாது. எமது மக்களின் சுபீட் சமான வாழ்விற்காகத் தம்மை அர்ப்பணித்து அரசியல் பணியாற்றி வரும் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கும் தமிழ் மக்க ளுக்கும் இந்த சமாதான காலங்களிலும் பாதுகாப்பில்லை என்பது இக்கொலைச் சம்பவம் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

கிழக்கில் நிலவிய அமைதியான சூழ லைக் குழப்பி சமாதானத்தைச் சிதைக்க விரும்பும் தீய சக்திகளை அரச படைகள் இணைத்துக் கொண்டு இவ்வாறான கொலைச் சம்பவங்களில் ஈடுபட ஆட்சியாளர்களே அனுமதிப்பார்களேயானால் விடுதலைப் புலிகளின் தலைமையின் கீழ் மீண்டும் யுத்தத்தை எதிர்கொள்ளத் தமிழர்களாகிய நாம் தயாராக இருக்கின்றோம் என்பதைத் தெரிவிக்க நாம் விரும்புகிறோம்.

ஆயுதமின்றி நடமாடுகின்ற விடுதலைப் புலிகளையும் தமிழ் தேசியப்பற்றாளர் களையும் கருணா குழு என்ற போர்வை யோடு இராணுவம் மேற்கொண்டு வரும் தாக்குதல் நிறுத்தப்பட வேண்டும். இந்தநிலை குறித்து மிகுந்த கண்டனத்தை நெடுந்தீவு மக்களாகிய நாம் தெரிவித்துக்கொள்கின் றோம் என அந்த மகஜரில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (33)

---

# பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து போராட்டம் நடத்த முன்பள்ளி சமூகம் ஏற்பாடு

(பருத்தித்துறை)

வடமராட்சி வடக்கு முன்பள்ளி சமூகத்தினர் பல்வேறு கோரிக் கைகளை முன்வைத்து இம்மாத இறுதியில் அடையாள வேலை நிறுத்தமொன்றை நடத்த முடிவு செய்துள்ளனர்.

அதாவது வடமராட்சிப் பகுதி களில் இயங்குகின்ற முன்பள் ளிகள் மூன்று பிரதேச செயலர் பிரிவு களைச் சேர்ந்தவை. முன்பள்ளிக் கட்டமைப்பு கீழ்க்கண்டவாறு உருவாக்கப்படல் வேண்டும். எட்டு முன்பள்ளிகள் ஒரு குடும்பமாக அமைதல் வேண்டும். இரண்டு குடும்பங்கள் ஒரு கொத்தணியாக உருவாக்கப்படல் வேண்டும்.

ஒரு பிரதேச செயலர் பிரிவில் மூன்று முதல் ஐந்து வரையான கொத்தணிகள் உருவாகும். பிரதேசங்களின் தூரம் அமைவிடம் ஆகியவற்றைப் பொறுத்து மருதங் கேணி பிரதேசத்தில் குடும்ப அமை வில்லாத நேரடியாக மூன்று கொத் தணிகள் உருவாகும். புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இரண்டும், இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதே சத்தில் ஒன்றும் உருவாகும்.

இதேபோல பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் வல் வெட்டித்துறை தொண்டமனாறு, கெருடாவில் போன்ற பிரதேசங்களி லும் நெகிழ்வுத்தன்மை கடைப்பிடிக் கப்படும். ஒவ்வொரு கொத்தணிக் கும் ஒரு முன்பள்ளி ஆலோசகர் நியமிக்கப்படல் வேண்டும். இவர் களுக்கேற்ற ஊதியம் போக்கு வரத்து வசதிகள் வழங்கப்படல் வேண்டும்.

போஷாக்கு உதவி வழங்கும் நிறுவனங்களிடம் அதனைப் பெற்றுக் கொத்தணி மையங்களில் வைத்து விநியோகிக்க ஒரு ஆட்டோ வழங்கப்படல் வேண்டும். பெற்றோர்களுக்கான விழிப்பு ணர்வை வழங்க பெற்றோர் வீட்டுக் கல்வியை அறிமுகப்படுத்த வேண் டும். துறைசார்ந்த கல்வித்தகை மையை விடுத்து முன்பள்ளி ஆசிரியவாண்மை விருத்திக்காக தொழில்சார் பயிற்சிகளும் வாய் மொழி ஆங்கிலம் பயிற்சிகளும் வழங்கப்படல் வேண்டும்.

சம்பள நிர்ணய சபைச் சட்டத் திற்கு அமைவாக ஊதியம் கிடைக்க நடாத்தும் நிறுவனங்க ளுக்கு பணிப்பு வழங்கி நடைமுறைப் படுத்தல் வேண்டும் முன்பள்ளிகளுக் குத்தேவையான சகல அடிப்படை வசதிகளும் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். சகல முன்பள்ளி செயற்பாடுகளும் கல்வி அமைச் சின் கீழ் கொண்டுவரப்ப டுதல் வேண்டும்.இக்கோரிக்கைகளை வெகு விரைவில் இதற்குரியவர்கள் நிறை வேற்றித் தருதல் வேண்டும். அப்படி நிறைவேறாத பட்சத்தில் இம்மாத இறுதியில் ஒரு அடை யாள வேலை நிறுத்தத்தை முடிவு செய்துள்ளோம் என முன்பள்ளி சமூகத்தினர் தெரிவித்துள்ளனர். (45)

---

# வரணி பாடசாலையில் தங்கியுள்ள மக்கள் சொந்த இடங்களுக்குத் திரும்ப விருப்பம்

(தென்மராட்சி)

சுனாமி பேரலையால் பாதிக் கப்பட்டு வரணி பாடசாலைகளில் தங்கியுள்ள மக்கள் தமது சொந்த இடங்களுக்கு விரைவில் திரும் பவே விருப்பம் தெரிவித்துள்ளனர்.

நெருக்கடி மிகுந்த வாழ்க்கை முறைகளும்,அதனால் வரும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் இவர்கள் முகம் கொடுக்கும் நிலை யில் உள்ளதாகவும்,இதனால் விரக்தி நிலை என்பது இயற் கையாகவே எழும் பிரச்சினையாக வுள்ளதால், தமது சொந்த இடங் களுக்கு மீண்டும் திரும்பிச் சென்று தமது தொழில் வளங்களை மேற்கொள்ளவும் வீடுகளைப் புனரமைக்கவும் கடற்கரைப் பகுதிக ளுக்கு மிக அருகில் உள்ள வீடுக ளுக்குப் பதிலாக தமக்கு பாது காப்பான பகுதியில் வீடுகளை அமைத்து உடனடியாக வழங்கு மாறும் அவர்கள் கோரியுள்ளனர்.

இதேவேளை இங்கு தங்கி யுள்ள மக்கள் சுகாதாரம் சம்பந் தமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதாகத் தெரிவிக்கப்படு கிறது. (28)

---

## புறக்கணிப்பு

(பருத்தித்துறை)

வலிகாமம் பகுதி பாட சாலை மாணவர்களுக்கு கற்றல் உப கரணங்கள், சீருடைகள், இதுவரை வழங்கப்படவில்லை யென தெரி விக்கப்படுகிறது.

மேற்குறித்த மாணவர்கள் சுனா மியால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்து மீளவும் வியாபாரி மூலையில் தங்கி வரும் வலிகாமம் பகுதி மாண வர்களுக்கு இதுவரை இவை வழங்கப்படவில்லையென தெரி விக்கப்படுகிறது. (45)

---

# காணாமற் போனோர் பற்றி விசாரணை நடத்த புலனாய்வுப் பிரிவினர் மீண்டும் யாழ்.செல்வர்

யாழ்.குடாநாட்டில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் குறித்த விசாரணைகளுக்காக சிறிலங்கா குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் குழுஒன்று யாழ். வருகை தரவுள்ளது.

இவ்வாறு வருகை தரும் இக்குழுவினர் எதிர்வரும் 25 ஆம் திகதி யாழ். பொலிஸ் நிலையத்தில் வைத்தும் 23 ஆம் திகதி கோப்பாய், பொலிஸ் நிலையத்தில் வைத்தும், 24 ஆம் திகதி ஆனைக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் வைத்தும் காணாமல் போனோர் சம்பந்தமான விசாரணைகளை நடத்தவுள்ளனர்.

இது இவ்வாறிருக்க யாழ். குடாநாட்டில் படையினரால் கைதாகி காணாமல் போனோர் குறித்த விசாரணைக்காக ஏற்கனவே பல தடவைகள் யாழ்.வந்து விசாரணைகளை நடத்திய சிறிலங்கா குற்றப் புலனாய்வுப் பிரிவினர் காணாமல் போனோரைக் கண்டுபிடிப்பதில் எதுவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. இதனால் தாம் பெரிதும் ஏமாற்றமடைந்திருப்பதாக காணாமல் போனோரின் பெற்றோர் பாதுகாவ லர்கள் கடும் ஆட்சேபத்தை வெளியிட்டு வருகின்றனர். (33)

---

# படையினருக்கு லஞ்சம் கொடுத்து சட்டவிரோதமாக மண் அகழ்வு

*-மாற்று நடவடிக்கை எடுக்க நேரிடுமென சூழல் பாதுகாப்புஅமைப்பு எச்சரிக்கை*

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் சட்டம் ஒழுங்குகள் சிறிலங்காப் படைகளின் கட்டுப்பாட்டில் இருப்பதால் சட்டவிரோத மண் அகழ்வைக் கட்டுப் படுத்துவதில் பெரும் சிக்கல்களைத் தாம் எதிர்நோக்கு வதாக சூழல்பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது. சட்டத்தைக் கையாளும் படையினரும்,பொலிசாரும் லஞ்ச ஊழல்களில் ஊறித்திளைப்பதால் சட்ட விரோத மண் அகழ்வில் ஈடுபட்டுள்ள சமூக விரோ திகள் துணிச்சலுடன் இச்செயல்களில் ஈடுபடுவதாகத் தெரியவருகிறது.இதனால் சூழலுக்கு ஏற்படும் ஆபத் துக் குறித்தும் எமது வளங்களை நாமே அழித்து வருவதால் வருங்காலச் சந்ததிகளை இக்கட்டான சூழ்நிலைக் குள் தள்ள காரணமாக நாமே இருக்கக் கூடாதென இவர்களுக்கு வலியுறுத்தி பல கூட்டங்களை நடத்தியும் கூட,கூட்டம் முடித்து வெளியே செல்வோர்,மீண்டும் மீண் டும் இக்கள்ள மண் அகழ்வில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் எமது வருங்காலத் தலைமுறைக்கு சவக் கிடங்கு தோண்டும் செயலைத் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது. அதற்கான மாற்று நடவடிக்கைகளுக்கு அவர் கள் முகம் கொடுக்கும் நிலை நிச்சயம் வரும் என்றும் சூழல் பாதுகாப்பு அமைப்பினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (28)

# தாயாகப்போகும் உங்களுக்கு....

தாய்மையுறுவது என்பது ஓர் புனிதமான சுகமான அனுபவம். இது ஓர் நோய் அல்ல. இது உங்களின் உடலமைப்பில் உடற்றொழிலில் ஏற்படுகின்ற தற்காலிக மாற்றமாகும். தாய்மையுறும் நீங்கள் ஒவ்வொருவரும் உங்களுக்கு பிறக்கப் போகும் குழந்தையைப் பற்றி சந்தோசமான ஆரோக்கியமான எதிர்பார்ப்புக்களை மனதில் கொண்டிருப்பீர்கள். ஓர் பெண்ணின் உடலமைப்பானது உயிர் வாழ்ந்து கரித்தரிப்பதோடு மட்டுமல்லாமல் ஓர் புதிய உயிரைத் தன்னுள்ளே உருவாக்கி வெளிக்கொண்டு வருவதற்கேற்ப அமைந்துள்ளது.



இங்கு கருத்தரித்தல் என்பது இயற்கையின் உடலியல் நியதி என்றாலும், இச் செயற்பாடு பெண்ணின் மீது ஒரு சுமையை ஏற்படுத்துகின்றது. மேலும் இவ் உடலமைப்பியல், உடற்றொழிலியல் மாற்றங்களின்போது சில பிரச்சினைகளும் ஏற்படத்தான் செய்கின்றது. பிரச்சினைகளில் பல பாரதூரமற்றவை. ஆனால் ஒரு சில பிரச்சினைகள். சிக்கல்கள் ஏற்படக் கூடியவை எனினும் கருவுற்றிருக்கும் உங்களில் பலர் இப் பிரச்சினைகளால் அதிகபயம்கொள்கின்றீர்கள். அனாவசியமாக மீறிக்கொள்கின்றீர்கள். உங்கள் மத்தியில் பல சந்தேகங்கள் எழுகின்றன. இவற்றைத் தீர்ப்பதற்கு உங்கள் மூத்தோர்களின் ஆலோசனைகளையும், உதவிகளையும் பெற்று வருகின்றீர்கள் என்பது கண்கூடு ஆனால் இவ்வாறு ஆலோசனைகளைப் பெறுகின்றபோது பல சமயங்களில் அவை கைகொடுத்தாலும் ஒரு சில சந்தர்ப்பங்களில் தேவையற்று மீறியும்,உடலுக்குக் கேடுகளையும் விளைவிக்கின்றன. ஆகவே தாய்மையுற்றிருக்கும் நீங்கள் ஆரோக்கியமான திடகாத்திரமான குழந்தைகளைச் சிக்கலின்றிப் பிரசவிப்பதற்கும் உங்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகள், சந்தேகங்கள் என்பவற்றை நிவர்த்தி செய்வதற்கும் ஏற்ப சில ஆலோசனைகள் இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

**01**. மாதாந்தம் தவறாது ஒழுங்காக மாதவிடாய் (மாதவிலக்கு) வருகின்ற பெண்ணொருவருக்கு தாம்பத்திய உறவுக்குப்பின்பும் இம் மாதவிலக்கு .வரத்தவறுகின்ற போது கர்ப்பம் தங்கிவிட்டதாக எடுத்துக் கொள்ளலாம். இதனை உறுதிப்படுத்துவதற்கு மாதவிலக்கு வராத, தவறிய திகதியிலிருந்து 10-15 நாட்களுக்குப் பிறகு சலப் பரிசோதனையும் அரை மாதங்களுக்குப் பின் "அல்றா சவுண்ட" என்ற பரிசோதனையையும் மேற்கொள்ளலாம்.

**02.**கர்ப்பவதிகளில்50-60 வீதமானோருக்கு கர்ப்பம் தங்கிய ஆரம்பகாலங்களில் குமட்டல்,வாந்தி என்பன காணப்படும். இக்குமட்டல் , வாந்தி போன்றன பொதுவாக முதல் 2-3 மாதங்களுக்குக் காணப்படும் பின்பு படிப்படியாகக் குறைந்து அற்றுவிடும். இதற்குப் பயப்படவேண்டிய தேவையில்லை. இவ்வாறு வாந்தி உள்ளவர்கள் ஒவ்வொரு நாளும் விடியற்காலையில் படுக்கையை விட்டு எழும்புவதற்கு முன்பே படுக்கையில் வைத்து பாலும், ஏதாவது பிஸ்கட்டும் சாப்பிட்டால் இத்தாக்கம் குறைவாக இருக்கும். அத்துடன் இலகுவில் சமிபாடு அடையக் கூடிய சத்து ஆகாரங்கள் உணவில் சேர்க்கப்பட வேண்டும் / ஆனால் சத்தி கடுமையாகவோ அல்லது பேறு காலத்தை அண்டிக்காணப்பட்டால் தாமதிக்காது வைத்திய ஆலோசனையைப் பெற வேண்டும்.

**03**. கருப்பை, இடுப்புச் சவ்வுகள் விரிவடைவதனால் அடிவயிற்றில் இலேசான நோவு, நாரி உளைவு போன்றன காணப்படும். ஆனால் அடிவயிற்றில் தாங்க முடியாத வேதனை காணப் பட்டால் இதனை யோர் ஆபத்தான விடயமாகக் கருதி வைத்திய ஆலோசனையைப் பெறவேண்டும்.

**04**. முகம், கழுத்துப் பகுதிகளில் கொழுப்புப் படிவதனால் ஓர் அதைப்பும் ஓமோன்களின் தாக்கத்தினால் தோல், முலைக்காம்பு போன்றவற்றின் நிறம் அதிகரித்தும் காணப்படும். சிலருக்கு இத்தாக்கத்தினால் நடுவயிறு கழுத்துப் போன்ற இடங்களில் கரும்புள்ளிகள் கூடத்தோன்றலாம்.

**05.**மார்பகத்தில்பால் சுரக்கும் கலங்கள் பெருப்பதனாலும், இரத்த விநியோகம் அதிகரிப்பதனாலும் மார்பகக் கனவளவு பெருத்துக் காணப்பட்டு ,அத்துடன் தொடும் போது நோவு ஏற்படுவதுடன் மெல்லிய சூடாகவும் இருக்கும். சிலருக்கு இடைக் கிடை ஊசி யால் குத்து வதுபோல வேதனை யும் காணப்படும்.

**06.** சாதாரண மாக கர்ப்பத்தின் போது இரத்தஅழுத் தம் வழமைக்கு மாறாக குறைவடைகின் றது. இங்கு இரத்த அழுத்தம் கூடிக் கொண்டு போவது ஓர் சிக்கலான அறிகுறியாகும்.

**07**. சாதாரணமாக ஓர் கர்ப்பவதிக்கு கர்ப்பகாலத்தில் அவரின் நிறை 10-12 கிலோவினால் அதிகரிக்கின்றது. இவ்வதிகரிப்பானது முதல் மூன்று மாதத்தில் இரண்டு கிலோவினாலும் அடுத்த நான்கு மாதத்தில் 4-5 கிலோவினாலும் இறுதி மூன்று மாதத்தில் 4-5 கிலோவினாலும் கூடுகின்றது. இந்நிறை அதிகரிப்பானது வழமைக்கு மாறாக கூடுதலாக அல்லது குறைவாக இருந்தால் மருத்துவ உதவியை நாட வேண்டும்.

**08.** பெருத்துக்கொண்டு வரும் கர்ப்பப்பையானது சலப்பையை அழுத்துவதனாலும். ஓமோன்களின் தாக்கத்தினாலும் சலம் அடிக்கடி போகும்.ஆனால் இங்கு சலம் அடிக்கடி போவதுடன் சலக்கடுப்பு, காய்ச்சல் வாந்தி போன்ற குணம் குறிகள் சேர்ந்து காணப்பட்டால் சிறுநீர் தொற்று ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு. இப்படியான சூழ்நிலையில் வைத்தியரை உடன் அணுக வேண்டும்.

**09.** கர்ப்பத்தை உறுதிப்படுத்தியதும் அண்மையில் உள்ள கர்ப்பவதிகள் சிகிச்சை நிலையத்தில் அல்லது வீட்டுத்தரிசிப்பு மேற்கொள்கின்ற மருத்துவ மாதுவிடம் பதிவு செய்துகொள்ளுதல் வேண்டும்.

**10**. நான்காம் மாதத்திலிருந்து கர்ப்பவதிகள் சிகிச்சை நிலையத்துக்குப் போகத் தொடங்க வேண்டும். இங்கு 7 ஆம் மாதம் வரை மாதம் ஒருதடவையும். பின்பு 9 ஆம் மாதம் வரை மாதத்திற்கு இருதடவையும், 9 ஆம் மாதத்திற்குப் பின் கிழமைக்கு ஒரு தடவையும் தவறாது சென்று அங்கு வைத்திய பரிசோதனைக்கு உங்களை உட்படுத்துவதுடன் தரப்படுகின்ற சத்து மருந்துகளை ஒழுங்காகத்தவறாது சென்று உட்கொள்ளுவதுடன் அங்கு கூறப்படுகின்ற ஆலோசனைகளையும் கேட்டுக் கடைப்பிடிக்க வேண்டும்.

**11.** ஈர்ப்பு வலி (தாயிற்கும், சேயிற்கும்) வராமல் தடுப்பதற்கு ஏதுவாக கர்ப்பம் தங்கி 5 ஆம்- 7 ஆம் மாதங்களில் ஈர்ப்பு வலித்தடை ஊசிபோடவேண்டும்.

**12**.புகைத்தல்,மதுபானம் அருந்துதல், வெற்றிலை பாக்கு மெல்லுதல்போன்றன முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும்.

**13**.தன்னுடைய நலனுக்காகவும் ,குழந்தையின் ஆரோக்கிய விருத்திக்காகவும் தாய் வழமையை விடக் கூடுதலான உணவு அருந்தவேண்டும். இன்றும் கர்ப்பவதிகள் மத்தியில் இரத்தச்சோகை முக்கிய பிரச்சினையாக இருப்பதினால் இதனைத் தவிர்ப்பதற்கு உணவில் இரும்புச்சத்து, உயிர்ச் சத்து அதிகளவில் காணப்படுகின்ற பச்சைக் காய்கறிகள், கீரைவகைகள், பருப்புவகைகள் போன்றவற்றை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

**14**. மாமிச உணவு உட்கொள்பவர்கள் முட்டை, மீன் போன்றவற்றை உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

**15**. சகல கர்ப்பவதிகளும் நாளாந்தம் பால்அருந்தவேண்டும். இது உங்கள் குழந்தையின் ஆரோக்கிய வளர்ச்சியை மேம்படுத்துவதுடன் தாய்ப்பால் சுரத்தலையும் அதிகரிக்கச் செய்கின்றது.

**16**. கர்ப்பம் தரித்தவருக்கும் மலச்சிக்கல் ஒரு பிரச்சினையாக இருப்பதினால் இதனைப் போக்குவதற்குமருந்துகளைத் தேவையின்றிப் பாவிக்காது நாளாந்தம் உணவில் ஏதாவது ஒரு கீரைவகை, பழவகை போன்றவற்றைச் சேர்த்துக் கொள்வதுடன் கொதித்தாறிய நீரை அதிகளவில் பருகவேண்டும்.

**17**.குழந்தையின் ஆரோக்கிய வளர்ச்சிக்காக கணிசமான அளவு ஓய்வு எடுத்துக கொள்ளவேண்டும். இரவில் கொள்கின்ற நித்திரையுடன் பகலிலும் ஒருசில மணித்தியாலங்கள் நித்திரை கொள்வது நன்று.

**18**. கர்ப்பம் தங்கிய ஆரம்பகாலத்தில் சில சமயம் கருச்சிதைவும், கடைசிக் காலங்களில் கர்ப்பையில் உள்ள சிசுவுக்குத் தொற்றும் ஏற்படலாம். இக்காரணத்திற்காக முதல் 01-02 மாதங்களுக்கும் கடைசிமாதத்திற்கும் தாம்பத்திய உறவினைத் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

**19**.கர்ப்ப காலத்தில் சாதாரண வீட்டு வேலைகளை எதுவிததடையுமின்றிச் செய்யலாம். ஆனால் அதிக சுமைதூக்குதல், கடுமையானவேலை செய்தல், நீண்டபயணம் மேற்கொள்ளுதல் போன்றவற்றைத் தவிர்த்தல் வேண்டும்.

**20**.கர்ப்பப்பை பெருக்கின்ற போது அமுக்கம் அதிகரிக்கப்படுவதுடன் குடல்பகுதி மேல்நோக்கித் தள்ளப்படுவதினால் மூச்சுவிடுவதில் சிரமம், நெஞ்செரிவு, செமியாக்குணம் போன்றன காணப்படலாம். இவை ஆபத்தானவை அல்ல. ஆனால் மூச்சுவிடுவதில் கடுமையான சிரமம் காணப்பட்டால் மருத்துவ ஆலோசனையைப் பெறவேண்டும்.

**21**.கர்ப்பகாலத்தில் இலேசான பருத்தி ஆடைகளை அணியவேண்டும் மார்பகம் இக்காலத்தில் பெருப்பதனால் அதற்கேற்ப உள்ளாடைகளைத் தெரிந்தெடுத்து அணிய வேண்டும். இறுக்கமான ஆடைகளை அணிவதைத் தவிர்த்தல் நன்று.

**22**. அதிக குதி உயர்ந்த செருப்புக்களை அணியக்கூடாது.

**23** வைத்தியர் ஒருவரின் ஆலோசனை இன்றி எதுவித மருந்து வகைகளையும் உட்கொள்ளக் கூடாது. குறிப்பாக கர்ப்பம் தங்கி முதல் மூன்று மாதங்களும் இயலுமான அளவில் எந்தவொரு மருந்து வகைகளையும் உட்கொள்ளுவதைத் தவிர்த்தல் நன்று.

**24**. பேறு காலத்திற்கு இரண்டு கிழமைகளுக்கு முன்பிருந்தே மகப் பேற்றுக்குத் தயாராக வேண்டும். இக்காலத்தில் விட்டு விட்டு வயிற்று வலிவருதல், வயிற்றை இறுக்கிக் கொண்டு வயிற்று வலி ஏற்பட்டால், நீர்க்குடம் உடைந்து நீர் போதல், இரத்தம், சளி ஆகியவற்றுடன் குறிபடுதல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடன் மருத்துவமனையில் அனுமதித்தல் வேண்டும்.

**25.** முதற்கர்ப்பம், 5 ஆவது பிள்ளைக்குப்பிறகு வரும் எந்தவொரு கர்ப்பமும் அவசியமாக மருத்துவமனையிலேயே மகப் பேற்றை வைத்துக்கொள்ள வேண்டும் ஏனெனில் இந்த இரு சாராரிலும் தான் மகப் பேற்றுச்சிக்கல்கள் கூடுதலாக ஏற்படுகின்றன.

**26.** கர்ப்பமுற்றிருக்கும் பெண்களுக்கு குறிப்பாக முதற்கர்ப்பம் தங்கியவர்க்கு ஏற்படுகின்ற உளரீதியான பயம், தயக்கம் போன்றவற்றைப் போக்குவதற்குக் கணவனின் அன்பும் அரவணைப்பும், உற்றாரின் ஆதரவும் இன்றியமையாதது.

**27**. முதற்கர்ப்பமாயின் இரத்தப்பிரிவுப் பரிசோதனை செய்து எந்தவகையான பிரிவு என உறுதிப்படுத்தவேண்டும்.

**28.** கர்ப்பகாலத்தில் பின்வரும் சிககல்கள், அறிகுறிகள் தென்பட்டால் தாமதிக்காது மருத்துவரின் ஆலோசனையைப் பெற வேண்டும்.

**அ**. காலில் (கணுக்காலைச்சுற்றி) வீக்கம் ஏற்பட்டால்.

**ஆ**. கர்ப்பம் தரித்து மூன்று மாதத்திற்குப் பிறகும் கடுமையான வாந்தி காணப்பட்டால்.

**இ**.தலையிடி,தலைச்சுற்று, வாந்தி சேர்ந்து காணப்பட்டால்.

**ஈ**. குருதிப்பெருக்குக் காணப்பட்டால்.

**உ**.கடுமையான முட்டு, மூச்சுவிட சிரமம் காணப்பட்டால்.

**ஊ**. கருவில் உள்ள குழந்தையின் துடிப்பு அசைவு போன்றன குறைதல் அல்லது முற்றாக அற்றுப்போதல்.

**எ**.பேறுகாலத்திற்கு முன்பே அடிவயிற்றில் கடுமையான வலிஏற்பட்டால்.

**29.** மகப்பேற்றுக்குத் தயாராகின்ற போது ஒரு சிறு பெட்டியில் அல்லது பையில் .


**அ**. சுத்தமான பழைய துணி(இதற்கு நூல்சேலை உகந்தது)

**ஆ**. குழந்தைக்கான சட்டை, நப்கின், சோப்.

**இ**.சுடுநீர்ப்போத்தல்,சீனி கோப்பி,கப்கள்.

**ஈ**.தாய்க்கு மாற்று உடை.

**உ**."கோட்டெ டக்ஸ்" லூப் உள்ளது) போன்றவற்றை எடுத்து வைக்க வேண்டும்.



**30.** குழந்தை பிறந்தஉடனே தாமதிக்காது தாய்ப்பால் ஊட்டலை ஆரம்பிக்க வேண்டும்.

**31**.குழந்தை பிறந்து முதல் போகின்ற மலம் கறுப்பாக இருக்கும். இவ்வாறு கறுப்பாகப் .போவதையிட்டுக் கவலைப்படத் தேவையில்லை.

**32.** மகப்பேற்றுக்குப் பிறகு தாய்க்குக் கொடுக்கிற உணவில் கடும் கட்டுப்பாடு போன்றவற்றால் தாய்க்கு மேலும் பலவீனம் ஏற்படுமே தவிர இவற்றால் எதுவித நன்மையும் ஏற்படுவதில்லை. அத்தாயானவள் தொடர்ந்து ஆரோக்கியமாக இருத்தால்தான் குழந்தைக்குத் தொடர்ந்தும் குறைவின்றிப் பாலூட்ட முடியும். எனவே மகப்பேற்றுக்கு முன்பு சாப்பிட்ட அதே உணவுகளைத் தொடர்ந்து சாப்பிட வேண்டும். அத்துடன் நிறைய நீர் அருந்த வேண்டும்.

**33**.குழந்தை பிறந்து முதல்நாள் தொடக்கம் 5 வயது வரை உள்ள காலப்பகுதியில் ஆபத்தான நோய்களுக்கு எதிராகப் போடப்படுகின்ற நோய்த்தடுப்புமருந்துகளை அந்தந்தக் குறிப்பிட்ட காலங்களில் தவறாது குழந்தைக்குப் பெற்றுக்கொடுத்தல் வேண்டும்.மேற்குறிப்பிட்ட சில அடிப்படையான கருத்துக்களையும். ஆலோசனைகளையும் சரிவரப்புரிந்து கடைப்பிடித்து வந்தால் தாயாகப் போகின்ற நீங்கள் எல்லோரும் உடல் உள ஆரோக்கியம் நிறைந்த ஓர் புதிய உயிரை இம் மண்ணில் ஜனனிப்பீர்கள் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

ஆக்கம் :-வைத்திய கலாநிதி
திருமதி. சி.பத்மலோசினி கரிகாலன்

# பிரதான வீதிகளின் சீர்கேடும் விபத்துக்கள் அதிகரிக்கக் காரணம்!



வன்னிப்பகுதியில் ஏற்பட்டு வரும் வீதி விபத்துக்களில் பெரும்பாலானவை வீதிகளின் சீர்கேடான தன்மைகளால் ஏற்பட்டு வருகின்றமையும் அவதானிக்கப்படுகின்றது.

யுத்தம் நடைபெற்ற காலத்திலும் சரி, தற்போதைய காலத்திலும் சரி வன்னிப் பகுதியில் வீதிகளின் நிலை சீர் செய்யப்படவில்லை. என்பதோடு தற்போதைய சூழ்நிலையில் அதிகரித்த வாகனப் பாவனை வீதிகளை மிக மோசமாகப் பாதிப்படையச் செய்துள்ளதும் அதற்கேற்றவாறு வீதிப் புனரமைப்புக்கள் இடம் பெறாமையும் வெளிப்படையானதாகும்.

வீதிகளின் சீர்கேடுகளால் பெறுமதியான வாகனங்கள் பலவும் சேதமடைந்து வருகின்றன. வீதிவிபத்துக்களுக்கு சாரதிகளின் கவனமின்மை ஒரு புறமிருந்தாலும், வீதிகளில் ஏற்பட்டுள்ள கிடங்குகள், வீதி அகலமாக்கப்படாமை, வீதிக் குறியீடுகள் முழுமையாக அமைக்கப்படாமை, வீதியில் உள்ள பாலங்கள் சில புனரமைப்புச்செய்யப்படாமை போன்ற காரணங்கள்கூட விபத்துக்களுக்கு முக்கிய பங்கு வகிக்கின்றன.

இவ்வீதிகளில் முக்கியமாக யாழ்ப்பாணம்-வவுனியாவை இணைக்கும் ஏ-9 பிரதான வீதியை நோக்குகையில் யுத்த நிறுத்தத்தின் பின்பு செப்பனிடப்பட்ட இவ்வீதியானது இன்னமும் முழுமையாக வேலைகள் முடிக்கப்படவில்லை.

வீதி புனரமைப்பு செய்யப்படும் போதே போக்குவரத்து தொடர்ந்தவண்ணம் இருந்தது. இதனால் அவ்வீதி மீண்டும் பாரிய சேதங்களுக்குள்ளாகி காணப்படுகின்றது.

ஏ-9வீதியில் கொக்காவில் சந்தியிலிருந்து புளியங்குளம் வரையான இடத்தில் சேதங்கள் காணப்படுகின்றன. அதிலும் கனகராயன்குளத்தை அண்டிய பகுதிகள் மிகவும் மோசமான முறையில் சேதமாகியுள்ளது.அவ்விடத்தில் வீதி முற்றாக கிடங்குகளாக உள்ளது.

இவ்வாறானஇடங்களில் வாகனங்கள் ஒன்றை ஒன்று விலத்திப்போக முற்படுகின்ற வேளையிலேயே விபத்துக்கள் ஏற்படுகின்றன.

அண்மையில் ஏ-9 வீதியில் ஏற்பட்ட விபத்துக்கள் பல இவ்வாறே ஏற்பட்டுள்ளன.

ஆகவே ஏ-9பிரதான வீதியுடன் ஏனைய வீதிகளையும் நாம் பார்ப்போமானால் கிளை வீதிகளிலும் முக்கியமான வீதிகள் இன்னும் செப்பனிடப்படாமல் உள்ளன. குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தை எடுத்து நோக்கினால் 'பி' மற்றும் 'சி'தர வீதிகள் உட்பட கிளை வீதிகள் பாரிய சேதமடைந்து போக்குவரத்திற்கு முற்றிலும் உகந்ததாக இல்லாமல் இருந்து வரும் நிலையில் கூட அவற்றை நல்ல முறையில் புனரமைக்க உரிய நடவடிக் கைகள் எடுக்கப்படுவ தாகத் தெரிய வில்லை.

வீதிகள் புனரமைக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்ற செய்திகள் கூட சில வேளைகளில் வெளியிடப்பட்டும் அதன் பின் அது குறித்து எதுவுமே இடம் பெறாத நிலை கூடக் காணப்படுவதையும் சுட்டிக் காட்டவேண்டியுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த வருட இறுதிப்பகுதியில் பெரும் மழையினால் பாதிக்கப்பட்ட வீதிகள் புனரமைப்பு செய்வதற்கு நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்ட வீதிகள் உடனடியாக செப்பனிடப்படும் என உறுதி மொழிகளை அரச அதிகாரிகள் வழங்கியும் இதுவரையும் வீதிகள் தொடர்பான எந்த விதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

கிளிநொச்சி நகரப்பகுதியில் இருந்து திருநகர் பகுதிக்குச் செல்லும் வீதி, கரடிப்போக்குச் சந்தியில் இருந்து உருத்திரபுரம் செல்லும்வீதி, கிளிநொச்சி மகாவித்தியாலயத்தடியில் இருந்து வட்டக்கச்சி வரை செல்லும்வீதி இவற்றுடன் கிளிநெச்சியில்இருந்து அக்கராயன், முழங்காவில் எனச் செல்லும் பிரதான வீதிகள் நீண்டகாலமாக சீரானவகையில் புனரமைக்கப்படாமல் இருப்பது அனைவருக்கும் தெரிந்த விடயம்.

எனவே கிளிநொச்சி மாவட்டம் மட்டுமன்றி வன்னிப் பகுதியில் உள்ள முக்கிய வீதிகள்,கிளைவீதிகள் எனப் பல்வேறுபட்ட வீதிகளும் உடனடியாக புனரமைப்புச்செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ளதால் புனரமைப்புச் செய்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்துஅவற்றை உரிய முறையில் பயன்படுத்தி வீதிகள் புனரமைப்பு செய்யப்படாத பட்சத்தில் வீதி விபத்துக்கள் அதிகரித்தே செல்லும் என்பதை அண்மைக் காலமாக ஏற்பட்ட விபத்துக்கள் எடுத்துக் காட்டுவதோடு மக்களுக்கு பெரும் நெருக்கடிகள் ஏற்பட்டு வருவதையும் அவதானிக்க முடிகிறது.

ஆகவே ஒட்டு மொத்தமாக வன்னிப் பகுதி எங்கும் கடந்த வருடம் பெய்த கடும் மழையினால் வீதிகள்,பாலங்கள் என்பன கடுமையான சேதத்திற்கு உள்ளாகி இருக்கின்றன. ஆனாலும் அந்தவீதிகளில் போக்குவரத்தும் அதிகமாகவே காணப்

— குகன். —

படுகின்றன. இவற்றை எல்லாம் கவனத்தில் எடுத்துமுக்கியமாகவும் உடனடியாகவும் புனரமைப்பு செய்யப்பட வேண்டிய வீதிகள்,பாலங்களை செப்பனிட்டு மக்களின்போக்குவரத்திற்கு ஏற்றவகையிலும், விபத்துக்களைத் தவிர்க்கும் வகையிலும் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் இதில் சம்பந்தப்பட்டோர் கவனம் செலுத்த வேண்டும்.

# முல்லை நகரை மேம்படுத்தும் நோக்கில் விழிப்பு ஒன்றியம் அமைப்பு

## செயற்றிட்டங்களை முன்னெடுக்க ஏற்பாடு

(முல்லை)

முல்லை நகரினை மேம்படுத்தும் நோக்குடன் முல்லைத்தீவு மகாவித்தியாலய பழைய மாணவர்கள் இணைந்து சுவிஸிலும், முல்லைத்தீவிலும் இணைப்புப் பாலமான முல்லை விழிப்பு ஒன்றியம் கடந்த வாரம் தெரிவு செய்யப்பட்டது.

இதற்குமுக்கிய பங்காற்றிய மயில்வாகனம் வேந்தன் முல்லைத்தீவில் இந்தக் குழுவினை நியமித்தார்.

தலைவராக பு.சந்திரகுமார், செயலாளராக திருமதி ஏ.ஜெயந்தியும், பொருளாளராக கொன்சால் ஆகியோர் உட்பட ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் ஒவ்வொருவர் வீதம் நியமிக்கப்பட்டனர். உடனடியாக செய்யப்படவேண்டிய வேலைத்திட்டங்கள் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன.

சுனாமியினால், போரினால் தாய்,தந்தையரை இழந்த பாடசாலை மாணவர்களுக்கு கல்விக்கு உதவுதல், கிராம மக்களை விழிப்படையச்செய்வதற்கான சன சமூக நிலையங்களுக்கு புத்தகங்கள், பத்திரிகைகள் வழங்குதல், புலமைப் பரிசிலில் வெற்றிபெற்ற வறிய மாணவர்களின் கல்வியினைத் தொடர உதவுதல், பல்கலைக்கழகம் செல்லும் சுனாமியினால், போரினால் பாதிக்கப்பட்ட வறிய மாணவர்களுக்கு உதவுதல் போன்றவற்றுடன் வட்டுவாகல்கிராமத்தில் கற்பகம் கலைக்கூடம் என்பனவற்றை செயற்படுத்துவதெனமுடிவு செய்யப்பட்டது கற்பகக்கலைக்கூடம் அமைப்பதற்கான இடமும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

முன்பள்ளி மாணவர்கள் முதல் பல்கலைக்கழக மாணவர்கள் வரை பயன் பெறக்கூடிய வகையில் நவீன கணினி வசதியுடன் கூடிய கலைக்கூடமே அமைக்கப்போவதாக சுவிஸ்லாந்திலிருந்து வருகைதந்த ம.வேந்தன் தெரிவித்தார். ஆரம்ப வேலைகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (20)

# செஞ்சோலை சிறுவர் இல்லத்தில் ஆசிரியர் சேவை முன்பயிற்சி நெறி

(அலுவலக செய்தியாளர்)

செஞ்சோலை சிறுவர் இல்லத்தில் ஆசிரியர்சேவை முன்பயிற்சி நெறி நேற்று முன்தினம் வெகு சிறப்பாக நிறைவெய்தியது.

செஞ்சோலை சிறுவர் இல்லத்தில் கற்கும் சிறார்களுக்கான கற்பித்தல் செயற்பாடுகளுக்காக புதிதாக உள்வாங்கப்பட்ட ஆசிரியர்களுக்கான முன் சேவைப் பயிற்சிநெறியின் நிறைவு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகி 5.30 மணிவரை சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வை ஆரம்பிக்கும் முகமாக தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன் ஏற்றிவைக்க, செஞ்சோலை சிறுவர் இல்லக் கொடியினை செஞ்சோலைப் பொறுப்பாளர் ஜனனி ஏற்றினார். தொடர்ந்து பொதுச் சுடரினை முல்லை வலய முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர் ஜெயம் சபாபதி ஏற்றினார்.

கிளிநொச்சிக் கல்விவலய ஆசிரிய ஆலோசகர்கள், உதவிக் கல்விப்பணிப்பாளர் ஆகியோரைக் கொண்ட வள அணியினரால் நடாத்தப்பட்ட இவ் 12 நாள் பயிற்சி நெறியின் நிறைவு நிகழ்வில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டதோடு வள அணியினரும் கௌரவிக்கப்பட்டனர். அத்தோடு வள அணியினராலும் பயிற்சி பெற்ற ஆசிரியர்களினாலும் தயாரிக்கப்பட்ட ஆக்கங்கள் அடங்கிய நூலும் வெளியிடப்பட்டது.

இதேவேளை பயிற்சிகளை வழங்க முன்வந்து பயிற்சிகள் நிறைவெய்தும்வரை சிறப்பாக செயற்பட்ட வள அணியினருக்கு செஞ்சோலைக் குடும்பத்தினர் தமது நன்றிகளையும் தெரிவிக்கின்றனர். (ச,கு)

## முள்ளிவாய்க்கால் மேற்குப் பகுதியில் காட்டு யானைகள் அட்டகாசம்

(முல்லை)

முள்ளிவாய்க்கால் மேற்குப் பகுதியில் காட்டு யானைகளின் அட்டகாசத்தினால் மக்கள் பீதியடைந்துள்ளனர்.

கடந்த மூன்றுநாட்களாக சாளம்பன் பகுதியினால் ஊருக்குள் புகுந்து மக்களின் பயன்தரு மரங்களை அழித்ததுடன் மக்களையும் துரத்தி வருகின்றன.

இதனால் மக்கள் தீ மூட்டி யானைகளைத்துரத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. முள்ளிவாய்க்கால் பிள்ளையார் கோவிலுக்கு முன்பாகவே யானைகள் பெரும் அட்டகாசம் செய்து வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (20)

# கிளி. பொதுச் சந்தையில் விற்பனை செய்யப்பட்ட தரமற்ற கடல் உணவுகள் பறிமுதல்!

## பொதுச் சுகாதார பகுதியினர் நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி பொதுச் சந்தையில் விற்பனைக்கென வைக்கப்பெற்றிருந்த தரமற்ற கடல்உணவினை கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பொது சுகாதார பரிசோதகர்களினால் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டது.

அதாவது குளிர்சாதனப் பெட்டி அல்லது கரையாத நிலையில் உள்ள ஐஸ்கட்டிகளில் சேமித்து வைப்பதற்கு பதிலாக பரல் தகரங்களில் கரைந்த ஐஸ் நீரில் வைக்கப்பெற்றிருந்த 29கிலோ கடல் உணவினையே மேற்படி பொதுபரிசோதகர்களால் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டதுடன் இனிவருங்காலங்களில் மக்களின் நலன்கருதி நிறைவான பாதுகாப்பான களஞ்சியப்படுத்தல் மூலம் தரமான கடல் உணவுகளை விநியோகம் செய்யும் படியும் பொதுசுகாதார பரிசோதகர்களால் வியாபாரிகளுக்கு அறிவூட்டல் வழங்கப்பெற்றது. அத்துடன் வாடிக்கையாளர்களும் தாங்கள் கொள்வனவு செய்யும் கடல் உணவுகளைத் தரமான வையாவென உறுதிப்படுத்தி பெற்றுக்கொள்ளும் படியும் கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் வேண்டியுள்ளனர். (சோ)

# காசோலைகளை ஆதாரம் காட்டிப் பெறுக!

(அலுவலக செய்தியாளர்)

பெ.புண்ணியராஜ் என்பவரால் தமிழீழ வைப்பக முல்லைத்தீவுக் கிளைக்கென வழங்கப்பட்ட இரண்டு காசோலைகள் பரந்தன் பகுதியிலிருந்து கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் விளம்பரப் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரித்துடையவர் ஆதாரம் காட்டி அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். (சோ)

# முழங்காவில் குமுழமுனைப் பகுதியில் கால்நடை வளர்ப்பு பயிற்சி

(கிளிநொச்சி)

முழங்காவில் - குமுழமுனையில் கால்நடை வளர்ப்பு பயிற்சி வகுப்பு முழங்காவில் குமுழமுனை பொது நோக்கு மண்டபத்தில் கடந்த வியாழன் பிற்பகல் 7 மணிக்கு கிராமசேவையாளர் வ.சந்திரபாலன் தலைமையில் நடைபெற்றது.

கால்நடைவைத்திய அலுவலகத்தினால் நடாத்தப் பெற்ற இப்பயிற்சி வகுப்பில் வைத்தியர் செ.கௌரிதிலகன், கால்நடை அபிவிருத்தி அலுவலகர் க.சூரியகுமாரன். ஆகியோர் கருத்துக்களை வழங்கினர்.

இறுதியாக இப்பயிற்சி வகுப்பில் நன்றியுரையினை மாதர் சங்கத்தலைவி பரவினித்தா நிகழ்த்தினார். (15)

# சுனாமி நிவாரணத்திற்குப் பதில் கடனை ரத்துச் செய்தது இத்தாலி

(கொழும்பு)

இலங்கையிடமிருந்து இத்தாலிக்குச் சேரவேண்டிய கடனை ரத்துச்செய்யப்போவதாக இத்தாலிய அரசு தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான இத்தாலியத் தூதுவர் நேற்றுமுன்தினம் இதனைத் தெரிவித்துள்ளார். இலங்கை இத்தாலிக்கு 72 இலட்சம் யூரோ கடனைச் செலுத்தவேண்டும். .கடன் ரத்து ஒப்பந்தத்திற்கு அமைய இலங்கை அரசு செலுத்த வேண்டிய கடன்தொகையை சுனாமியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் புனர்வாழ்வு புனர்நிர்மாணத் திட்டங்களுக்கு செல்லவிடவேண்டுமெனவும் தெரிவித்துள்ளது.

# அவசர தேவைகள் குறித்து பொதுக் கொள்கை ஏற்படுத்த அமைச்சரவை தீர்மானம்

அவசர தேவைகள் குறித்து பொதுக்கொள்கை ஒன்றை ஏற்படுத்த அமைச்சரவை தீர்மானம் மேற்கொண்டுள்ளது . அதனை அரசியலமைப்புக்குள் இணைத்துக்கொள்ளவும் அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

கடந்த புதன் கிழமை இரவு பிரதம மந்திரியின் தலைமையில் கூடிய அமைச்சரவை இந்த விடயங்களில் இணக்கங்களை எட்டியது. இதன் அடிப்படையில் சுனாமி, புவியதிர்வு, வெள்ளம் மற்றும் சூறாவளி போன்ற அனர்த்தங்களின் போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் ஆலோசனைகள் மற்றும் நியமங்கள் அரசியலமைப்பில் அடக்கப்படவுள்ளன.

பொதுவாக அரசாங்கம் தீர்மானித்துள்ள கடற்கரையில் இருந்து 100 மீற்றர் தூரத்துக்குள் கட்டடங்கள் அமையாமை தொடர்பான கொள்கையும் இதில் உள்ளடக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (32)

# குமார் பொன்னம்பலம் கொலை வழக்கு மார்ச்சில் விசாரணை

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் மாமனிதர் குமார் பொன்னம்பலம் கொலை வழக்கு விசாரணை எதிர்வரும் மார்ச் 14ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்தவழக்கு கொழும்பு மேலதிக நீதவான் சுஜீவ நிசங்க முன்னிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது. இந்த வழக்கில் சந்தேக நபரான உடகம ரட்ணவீரகேசுதா றோகனா என்பவர் நீதிமன்றத்தில் சமுகமளித்திருந்தார். இச் சம்பவம் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டிருந்த சுகத் ரணசிங்க மற்றும் கமலசிறி கலிங்க வாசன (மொறட்டு சமன்) ஆகிய இருவரும் ஏற்கனவே கொலை செய்யப்பட்டுள்ளனர். இதனால் உடகம ரட்ணவீரகே சுதா றோகனா ஆகிய சந்தேக நபர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

1999ஆம் ஆண்டு சனவரி 5ஆம் திகதி வெள்ளவத்தையில் வைத்து மாமனிதர் குமார் பொன்னம்பலம் சுட்டுக் கொல்லப்பட்டது தெரிந்ததே.

## நிதியம் அமைப்பு

(கொழும்பு)

இலங்கை உட்பட சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு உதவுவதற்கென ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியம் ஒன்றை நிறுவியுள்ளது.

இவ் வங்கி ஆரம்ப கட்டக் கொடுப்பனவாக 600 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

# சிறையிலுள்ள வைத்தியசாலைக்கு எஸ்.பி.யை மாற்றப் பணிப்பு

**-கொழும்பு அரசவைத்தியசாலையில் பாதுகாப்பிற்கு உத்தரவாதமில்லையாம்**

(கொழும்பு)

முதுகெலும்பு வருத்தம் காரணமாக வெலிக்கடைச் சிறைச்சாலையில் இருந்து தற்போது கொழும்பு அரச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் எஸ்.பி திசாநாயக்கவை உடனடியாக வெலிக்கடைச் சிறைச்சாலை வைத்தியசாலைக்கு மாற்றும்படி சிறைச்சாலை ஆணையாளர் குணரத்ன உத்தரவிட்டுள்ளார். அரச வைத்தியசாலையில் இவரின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிக்க முடியாதென்றும் சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்துள்ளார்


# பதவி வெற்றிடம்

வவுனியா வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கீழ் குறிப்பிடப்படும் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன. விண்ணப்பிக்க விரும்பும் தகைமையுள்ள ஆண் விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் "தலைவர், வவுனியா-வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், நெடுங்கேணி" எனும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலமாகவோ அன்றேல் நேரடியாகவோ 05.03.2005 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் சகல விபரங்களும் தெளிவாக உள்ளடக்கப் பட்டதாக சுயமாகத் தயாரித்து அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். வயதெல்லை 18 தொடக்கம் 45 வரை உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

**01.இலிகிதர:-302/14**

சம்பளம:- 31/99 இன் படி 5000.00-70.00X10-75X10 6450.00
60000.00-840.00X10-900.00X10-77400.00

கல்வித் தகைமை:- 01.க.பொ.த.சாதாரண தரப்பரீட்சையில் தமிழ் பாஷை, கணிதம்1/கணிதம்2/ வர்த்தக எண்கணிதம்/ எண்கணிதம் ஆகிய இரு பாடங்களில் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுட்பட மூன்று பாடங்களில் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

02.தமிழ்,கணிதம்/வர்த்தகமும் கணக்கியலும் க.பொ.த உயர்தரத்தில் சித்தி பெற்றிருப்பின் க.பொ.த.சாதாரண தரத்தில் தமிழ், கணிதம்1/கணிதம் 2/வர்த்தக எண்கணிதம்/எண்கணிதம் ஆகியவற்றில் ஒன்றில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் என்பதிலிருந்து விலக்களிக்கப்படும்.

**02.கிளை முகாமையாளர:-208/13**

சம்பளம:-31/99 இன் படி 5250.00-75.00X10-80.00X10 -6800.00
63000.00-900.00X10-960.00X10-81600.00

கல்வித்தகைமை:-01.க.பொ.த.சாதாரண தரப்பரீட்சையில் தமிழ் பாஷை, கணிதம்1/ கணிதம்2/ வர்த்தக எண்கணிதம்/ எண்கணிதம் ஆகிய இரு பாடங்களில் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுட்பட மூன்று பாடங்களில் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

02.தமிழ்,கணிதம்/வர்த்தகமும் கணக்கியலும் க.பொ.த உயர்தரத்தில் சித்தி பெற்றிருப்பின் க.பொ.த.சாதாரண தரத்தில் தமிழ், கணிதம்1/கணிதம் 2/வர்த்தக எண்கணிதம்/எண்கணிதம் ஆகியவற்றில் ஒன்றில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் என்பதிலிருந்து விலக்களிக்கப்படும்.

**03.வாகனக் காப்பாளர:-314/16**

சம்பளம்:-31/99 இன் படி 4500.00-60.00X10-65.00X10-5750.00
54000.00-720.00X10-780.00X10-69000.00

கல்வித் தகைமை:-5 ஆம் ஆண்டு கல்வித் தகைமையுடன் நல்ல தேக ஆரோக்கியமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**04.வாகன சாரதி:-312/14**

சம்பளம்:-31/99 இன்படி 5000.00-70.00X10-75.00X10-6450.00
60000.00-840.00X10-900.00X10-77400.00

கல்வித்தகைமை: ஐந்தாம் ஆண்டு கல்வித் தகைமையுடன் பாரவூர்தி செலுத்துவதற்கான சாரதி அனுமதிப்பத்திரத்துடன் ஒரு வருடத்திற்குக் குறையாத அனுபவமும்.

தலைவர்,
வ.வ.ப.நோ.கூ.சங்கம்,
நெடுங்கேணி.
16.02.2005

(சி.11436)



# மாபெரும் இயல விற்பனை

ஹொண்டா, ஹீரோஹொண்டா, யமஹா, சுசுக்கி, பஜாஜ் ஆகிய இனங்களைக் கொண்ட உந்துருளிகள் இயங்கும் நிலை, உதிரிகளாக்கும் நிலையில் விற்பனைக்கு விடப்படும்.

பார்வையிடும் நாள் :- 17.02.2005, 18-02-2005, 19.02.2005 வரை மட்டும்

இயலம் நடைபெறும் நாள் :- 22. 02.2005 காலை 09.மணிக்கு

இடம் :- உடைமைப் பகுதிச் செயலகம், வேணாவில், புதுக்குடியிருப்பு.



உந்துருளிக்கான கேள்வி கோரல் விண்ணப்பக் கட்டணம் 200/=

உதிரிகளுக்கான கேள்வி கோரல் விண்ணப்பக் கட்டணம் 500/=



(5690)

# தேர்தல் ஆணைக்குழு கேட்டதற்கிணங்க
# இந்திய அமைச்சரவை மாற்றம் தாமதம்

(புதுடில்லி)

தலைமை தேர்தல் ஆணைக்குழு கேட்டுக் கொண்டதன் பேரில் அமைச்சரவை மாற்றத்தைப் பிரதமர் மன்மோகன்சிங் தள்ளி வைத்துள்ளார்.

மத்திய அமைச்சரவை கடந்த 17ஆம் திகதி விரிவாக்கம் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப் பட்டது. ஆனால் தலைமைத் தேர்தல் ஆணைக்குழு கேட்டுக் கொண்டதன் பேரில் அமைச்சரவை மாற்றத்தைப் பிரதமர் மன்மோகன் சிங் தள்ளி வைத்துள்ளார்.

பீகார், ஜார்க்கண்ட் ,அரியானா ஆகிய 3 மாநிலங்களில் சட்ட சபைத் தேர்தல் நடந்து வருகிறது. இந்தத் தேர்தல்கள் வருகிற 23 ஆம் திகதியுடன் முடிவடைகிறது. அதுவரை அமைச்சரவை மாற்றத்தைத் தள்ளி வைக்குமாறு தலைமை தேர்தல் ஆணைக்குழு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டு இருக்கிறது.

இதையடுத்து 3 மாநிலத் தேர்தல்கள் முடிவடைந்த பின்னர் அமைச்சரவையை விரிவாக்கம் செய்ய பிரதமர் மன்மோகன்சிங் முடிவு செய்துள்ளார். டில்லி அரசியல் வட்டாரங்கள் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளன. அமைச்சரவை விரிவாக்கத்தின் போது முன்னாள் அமைச்சர் சதீஷ் சர்மா, தமிழக காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசகன், முன்னாள் அமைச்சர் மாதவராவ் சிந்தியாவின் மகன் ஜோதிர் ஆதித்யா சிந்தியா ஆகியோர் புதிதாக அமைச்சரவையில் சேர்க்கப்பட இருப்பதாக ஏற்கனவே தகவல்கள் வெளியாகியுள்ளன.மேலும் ஒருசில அமைச்சர்களின் இலாகாக்களை மாற்றியமைக்கவும், ஒரு சிலரின் பதவிகளைப் பறிக்கவும் பிரதமர் மன்மோகன்சிங் முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதனிடையே கேரள முதல்வர் உம்மன் சாண்டி கடந்த சில தினங்களுக்கு முன்பு காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தியைச் சந்தித்தார். அப்போது அவர் அமைச்சரவை விரிவாக்கத்தின்போது கேரளாவிற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்.



சேலத்தில் அமோனிய வாயுக்கொள்கலன் வெடித்ததில் மூவர் பலியாகியுள்ளனர்.அதில் ஒருவரது உடலிற்கருகில் உறவினர் கதறியழுகின்றனர்

# வாக்காளர்கள் பெயர்நீக்கப் புகார்
# 4 மாவட்ட ஆட்சியர்கள் திடீர் மாற்றம்

(சென்னை)

தமிழக சட்டமன்றத் தேர்தலின் போது வாக்காளர்கள் பெயர் நீக்கப் புகார் எதிரொலியாக உதகை, தருமபுரி,புதுக்கோட்டை, திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர்களை மாற்றம் செய்து உத்தரவிட்டுள்ளது தமிழக அரசு.

தேர்தல் ஆணையகத்தின் அறிவுறுத்தலின் பேரில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உதகை மாவட்ட ஆட்சியர் கே.எஸ். முத்துசாமி மாற்றப்பட்டு அவருக்குப் பதிலாக சி.விஜயராஜ் குமார் (பொதுத்துறை (மரபு) துணைச்செயலர்) நியமிக்கப்பட்டுள்ளார். திருவள்ளூ மாவட்ட ஆட்சியர் குமார்ஜெயந்த் மாற்றப்பட்டு அவருக்குப்பதிலாக எஸ்.தங்கசுவாமி (முதல்வரின் இணைச்செயலர்) நியமிக்கப் பட்டுள்ளார்.

தருமபுரி மாவட்ட ஆட்சியர் ஆஷிஸ் வச்சானி மாற்றப்பட்டு அவருக்குப் பதிலாக சுதிப் ஜெய்ன் (தமிழ் நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்) நிர்வாக இயக்குநர்) நியமிக்கப்பட்டுள்ளர்ர்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் ஜதிந்திரநாத் ஸ்வெயின் மாற்றப்பட்டு அவருக்குப் பதிலாக ஆர்.தியாகராஜன் (நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட அலுவலகம் சிறப்புப்பணி ஆணையர் மற்றும் இயக்குனர் ) நியமிக்கப் பட்டுள்ளார்.

## சேலத்தில் மூவர் பலி

(சென்னை)

சேலம் அரச வைத்தியசாலைக்கு அருகில் பனிக்கட்டித் தொழிற்சாலையில் நேற்று அமோனிய வாயுக்கொளகலன் வெடித்து மூவர் பலியாகியுள்ளனர். மேலும் இருவர் காயமடைந்துள்ளனர். மூக்கை அரிக்கும் தன்மை கொண்ட அமோனிய வாயுவினால் வைத்தியசாலையிலிருந்த மக்கள் அலறிஅடித்துக் கொண்டு ஓடினர். சற்று நேரத்தின் பின் அவ்விடத்திற்கு வந்த தீயணைக்கும் படையினர் பனிக்கட்டித் தொழிற்சாலைக்குள் நுழைந்து தீயை அணைத்து இறந்தவர்களையும் காயமடைந்தவர்களையும் மீட்டனர்.

# செயற்கைக் கோளுக்கு எக்ஸ்-ரே தொலைநோக்கி
## பிரிட்டன் பல்கலை.யுடன் இந்தியக்குழுபேச்சு

(லண்டன்)

இந்தியச்செயற்கைக்கோளுக்கு நவீன எக்ஸ்-ரே தொலைநோக்கி உருவாக்குவது தொடர்பாக பிரிட்டனின் லீசெஸ்டர் பல்கலைக்கழகத்துடன் இந்தியக் குழு பேச்சு நடத்தியுள்ளது. 2007இல் விண்ணில் செலுத்தப்படவுள்ள 'அஸ்ரோசாட்' செயற்கைக்கோளில் இந்த நவீன சாப்ட் எக்ஸ்ரே தொலைநோக்கிக் கருவி பயன்படுத்தப்படும்.

சாப்ட் எக்ஸ்-ரே தொலைநோக்கிக் கருவிக்கான புகைப்படக்கருவியை லீசெஸ்டர் பல்கலைக்கழகம் உருவாக்கித்தர ஒப்புக்கொண்டுள்ளதென அப்பல்கலைக்கழக விண்வெளி ஆராய்ச்சி மைய விஞ்ஞானி கய்பீட்டர்ஸ் கூறினார்.

தொலைநோக்கிக் கருவியின் பிரதான உடற்பாகத்தை மும்பை,டாடா ஆராய்ச்சிக்கழகம் தயாரிக்கும் என்று அவர் தெரிவித்தார்.



வீரதீரச்செயல் புரிந்த 486 பொலிசாருக்குச் சென்னையில் நடந்த விழாவில் முதலமைச்சர் ஜெயலலிதா விருது வழங்கினார்.


# பணிநிலை வேண்டுகை

காந்தருபன் அறிவுச் சோலை சிறுவர் இல்லம் மலையாளபுரத்தில் புதிய கட்டடப்பணியை மேற்கொண்டு வருகிறது. இக்கட்டடவேலை அபிவிருத்திப் பணிநிலைக்குள் தொழில் புரிய வல்லமையுடைய இருபாலாரும் நேர்முகத் தேர்வில் தோற்றலாம்.

**பணிநிலை**

| | |
|---|---|
| 01.முகாமையாளர் | 01 |
| 02.மேற்பார்வையாளர் | 06 |
| 03.அலுவலர் | 01 |
| 04.தட்டெழுத்தாளர் | 01 |
| 05.கணக்குப்பதிவாளர் | 01 |
| 06.கொள்வனவாளர் | 02 |
| 07.களஞ்சியக் காப்பாளர் | 02 |
| 08.காவலாளி | 03 |
| 09.சாரதி | 04 |
| 10.வோட்டப்பம்,ஜெனரேற்றர் இயக்குபவர் | 02 |
| 11.மேசன் ஒப்பந்தக்காரர்கள் | 10 |
| 12.தச்சு ஒப்பந்தக்காரர்கள் | 04 |
| 13.கூலித்தொழிலாளர்கள் | 50 |

நேர்முகத் தேர்வு:-21,22 பெப்ரவரி 2005 காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 வரை.

இடம்:-அறிவுச்சோலை-புதிய வளாகம்,
மலையாளபுரம், கிளிநொச்சி.

குறிப்பு:- 01.உரிய தகைமையுடன் தேர்வில் தோற்றலாம்.
02.சம்பளம் நேரில் பேசப்படும்.

நிர்வாகச் செயலகம்,
காந்தருபன் அறிவுச்சோலை,
சிறுவர் இல்லம்.

(சி.11346)

# அபிஷா தனியார் வைத்தியசாலை



தமிழ் மகாவித்தியாலயம் அருகாமை, வவுனியா.

நோயாளருக்கான சகல விதமான மருத்துவ பரிசோதனைகளையும் 21-01-2005 இல் திறக்கப்பட்ட புதிய நவீன கட்டடத் தொகுதியில் ஒருங்கமைத்து வழங்குகிறது.

உங்கள் தேவைகளுக்கு நாடுங்கள்.

நிர்வாகம்
அபிஷா தனியார் வைத்தியசாலை,
வவுனியா.
தொ.பே: 024-222 1474,
024-222 4574,0777 237143



(5485)

# தீவிர பயிற்சியில் சச்சின் டெண்டுல்கர்



முழங்கை வலி காரணமாக அவதிப்பட்டு வரும் இந்திய கிரிக்கெட் நாயகன் சச்சின் டெண்டுல்கர் தீவிர பயிற்சி செய்து வருகிறார்.

முழங்கைவலி காரணமாக அவதிப்பட்டு வரும் இந்திய கிரிக்கெட் நாயகன் சச்சின் டெண்டுல்கர் பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் ஆடுவது இன்னும் உறுதியாகவில்லை. கடந்த சில வாரங்கள் முழு ஓய்வு எடுத்த டெண்டுல்கர் நேற்று முன்தினம் முதல்முறையாக பயிற்சி செய்தார். தனது வீட்டின் அருகே உள்ள மைதானத்தில் சில மணி நேரம் பயிற்சி செய்த டெண்டுல்கர் பின்னர் உள்ளூர் அணி ஆடிய போட்டியை நேரில் சென்று பார்த்தார். இங்கிலாந்து 'ஏ' பயிற்சியாளர் கிரகாம்கூச் கேட்டுக்கொண்டதற்கிணங்க டெண்டுல்கர் இளம் வீரர்களை ஊக்கப்படுத்துவதற்காக மைதானம் சென்றார்.

இந்த நிலையில் வரும் 22 ஆம் திகதி ஹைதராபாத்தில் நடக்கவுள்ள துலீப் டிராபி கிரிக்கெட் போட்டியில் டெண்டுல்கர் கலந்து கொள்வதாக அவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

ஆனால் இன்னும் இந்த செய்தியை யாரும் உறுதிப்படுத்தவில்லை. உடல் தகுதியை நிரூபிக்க டெண்டுல்கர் ஹைதராபாத் போட்டியில் நிச்சயம் கலந்து கொள்வார் என்று கூறப்பட்டுள்ளது.

## வலி வடக்குப் பிரதேச செயலர் தடகளப் போட்டி

வலிவடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையேயான தடகள விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு உதவிப் பிரதேச செயலாளர் சு.முரளிதரன்தலைமையில் மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஹட்டன் நஷனல் வங்கியின் சுன்னாகம் கிளை முகாமையாளர் சி. சுந்தரேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தலைவர் சி.சிவமகாராசா , மக்கள் வங்கி காங்கேசன்துறை கிளை முகாமையாளர் பொன். கணேசமூர்த்தி யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி இ.றோகான் இராஜசிங்கம், தெல்லிப்பழை பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.சரவணன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (41)

### பரபரப்பான வெலிங்டன் ஒரு நாள் போட்டி

# மெக்ராத்தின் அபார பந்து வீச்சில் நியூசிலாந்தின் வெற்றி வாய்ப்பு தகர்ந்தது







அவுஸ்திரேலிய-நியூசிலாந்து அணிகளுக்கிடையில வெலிங்டனில நடைபெற்ற முதலாவது ஒரு நாள் போட்டியில் அவுஸ்திரேலிய அணி பத்து ஓட்டங்களால் நியூசிலாந்தை தோற்கடித்தது.

பகலிரவாக நடைபெற்ற மேற்படி போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத் தாடத் தீர்மானித்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 236 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஹெய்டன் சிறப்பாக ஆடி 71 ஓட்டங்களைக் குவித்து மீண்டும் அணியில் இடம் பிடித்துக்கொண்டார். இவரைவிட பொண்டிங் 61, சைமன்ஸ் 53 ஓட்டங்களைக் குவித்தனர்.

பந்து வீச்சில் ஸ்ரைரிஸ் நான்கு விக்கெட்டுக்களையும், கெய்ன்ஸ் இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 237 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பாட்டத்தை ஆரம்பித்த நியூசிலாந்து ஒரு கட்டத்தில் 73 ஓட்டங்களுக்கு நான்கு விக்கெட்டுக்களை இழந்து இக்கட்டான நிலையில் இருந்தது.



அதன் பின்னர் ஜோடி சேர்ந்த மக்கலமும் மக்மிலனும் ஆபாரமாக ஆடி ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்ததுடன் அணியை வெற்றியை நோக்கி நகர்த்திச் சென்றனர்.

இந்த நிலையில், அவுஸ்திரேலியாவின் நம்பிக்கைப் பந்து வீச்சாளர் மெக்ராத் அவர்கள் இருவரையும் ஆட்டமிழக்கச் செய்து அவுஸ்திரேலியாவின் வெற்றியை உறுதிப்படுத்தினார்.

இவர் 9.4 ஓவர் பந்து வீசி மூன்று ஓட்டமற்ற ஓவர் அடங்கலாக 16 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இவரைவிட பிரெட்லீ மூன்று விக்கெட்டுக்களையும், சைமன்ஸ், கொக் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.நியூசிலாந்து 48.4 ஓவரில் 226 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும்இழந்தது. துடுப்பாட்டத்தில் மக்கலம் 76, அஸ்ரல் 65, மக்மிலன் 37 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றனர்.போட்டியின் ஆட்ட நாயகனாக மெக்ராத் தெரிவானார்.

# பதானின் பந்துவீச்சை சந்திக்கத் தயார் பாக்.துணைத் தலைவர் யுகனா



இந்திய தொடரில் பதானின் பந்து வீச்சை சந்திக்கத் தயார் என்கிறார் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் துணைத் தலைவர் யூசுப் யுகனா. பாகிஸ்தானுக்கு எதிரான கிரிக்கெட் தொடரில் இந்திய அணியின் இளம் வேகப்பந்து வீச்சாளர் இர்பான் பதான் அதிகம் எதிர்பார்க்கப்படுகிறார். இந்திய அணி பாகிஸ்தான் சென்ற போது, இவரின் துடிப்பான பந்து வீச்சில் பல முறை தனது விக்கெட்டை பறி கொடுத்தவர் யூசுப் யுகனா இந்த முறை "எனது துடுப்புப் பேசும்" என்கிறார்.

பாக்.அணியின் துணைத் தலைவரான இவர் நிருபர்களிடம் கூறுகையில், இந்திய-பாக் தொடர்-பதான் யுகனாவுக்கு இடைப்பட்ட தொடராக கருதக்கூடாது.

பாகிஸ்தானுக்கு இந்தியா வந்த நேரத்தில், இவரது "இன்-ஸ்விங்கர் பந்துகளில் நான் பல முறை ஆட்டமிழந்தது உண்மை தான். அப்போது அவரது பந்து வீச்சுக்கு எங்கள் மைதானங்களும் ஒத்துழைத்தன. இந்த தொடர் முற்றிலும் வித்தியாசமானது. பந்துகளும் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. கடந்த முறை போல எனது விக்கெட்டை எளிதாக இழந்து விடமாட்டேன். பழைய நினைவுகளை மறந்து சிறப்பாக ஆடி ஓட்டம் குவிப்பேன் என்கிறார்.

இந்தியாவுக்கு எதிராக கடந்த சில போட்டிகளில் பெற்ற அபார வெற்றி பாக்.அணி வீரர்களின் தன்னம்பிக்கையை அதிகரிக்கிறது என்றும் யுகனா தெரிவித்தார்.



எதென்சில் வரும் 26 இல் மனநிலை பாதிக்கபபட்டோருககான குளிர்கால சிறப்பு ஒலிம்பிக் போட்டிகள் நடக்கவுள்ளன. இந்த போட்டிகளுக்கான ஒலிம்பிக் ஜோதி நேற்று முன்தினம் டோக்கியோ வந்தது. ஜோதியை ஏந்தி வந்த ஜப்பான் பிரதமர் ஜூனிச்ரோ கொய்சுமி (இடது) விளையாட்டு வீர் ஒருவரிடம் வழங்கி மகிழ்கிறார்.

# கென்ய கிரிக்கெட்டில் குழப்பம் நீக்க கண்காணிப்பாளர் குழு நியமனம்





கென்ய கிரிக்கெட்டில் ஏற்பட்டிருக்கும் குழப்ப நிலையை நீக்கும் முகமாக அந்நாட்டு விளையாட்டுத்துறை அமைச்சு புதிய கண்காணிப்பாளர் குழு ஒன்றை நியமிக்க முடிவு செய்திருப்பதாக அறிய வருகின்றது.

கலைக்கப்பட்ட கிரிக்கெட் சபையிடமிருந்து மேற்படி குழு பொறுப்புக்களை விரைவில் கையேற்கும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எனினும் சர்வதேச கிரிக்கெட் சபையிடம் இருந்து உத்தியோகபூர்வ அறிவித்தல் வரும்வரை குழு காத்திருக்கின்றது. இது தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள கென்ய கிரிக்கெட் சபையின் முன்னாள் தலைவர் சரட் ஹாய் இது சட்ட விதிகளுக்கு முரணானதாக தெரிவித்துள்ளார். எனினும், விளையாட்டமைச்சர் ஒக்கிலோ அயக்கோ போட்டிகளை நிகழ்த்த 11 பேர் கொண்ட இடைக்கால அணி ஒன்றை தற்காலிகமாக அறிவித்துள்ளார்.

இதற்கு பயிற்சியாளராக முன்னாள் பாகிஸ்தானிய வீரர் முதாசர் நாசரும், பதில் சபைத் தலைவராக இஸாக் கலுவாவும் நியமிக்கப்பட்டுள்தாக தெரிய வருகிறது.


# கேணல் சங்கர் வலுவூட்டல் நிலையம் கிளிநொச்சியில் திறந்து வைப்பு












கேணல் சங்கர் ஞாபகார்த்த உடல் வலுவூட்டல் நிலையம் கிளிநொச்சியில் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விளையாட்டுத்துறையினரால் கிளிநொச்சி மத்திய மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள இவ் உடல் வலுவூட்டல் நிலையத்தினை கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் அவர்கள் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, வடக்கு ,மாகாண விளையாட்டுத்துறை உதவிப் பணிப்பாளர் விமலராஜன் ஆகியோர் மங்கள விளக்கினை ஏற்றிவைத்தனர்., தமிழீழத் தேசியக் கொடியை யாழ். மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுளன் ஏற்றினார். பெயர்ப் பலகையை விளையாட்டுத்துறை நிர்வாகப் பொறுப்பாளர் றோமியோ திரை நீக்கம் செய்து வைத்தார். இந்நிகழ்வில் விளையாட்டுத்துறைசார் அதிகாரிகள், விளையாட்டு வீரர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச,கு)



## சிந்தனைக்கு



எமது சுதந்திரத்தை நாமே போராடி வென்றெடுக்கும் மனோதிடமும், நம்பிக்கையும், உறுதிப்பாடும் எங்களிடம் உண்டு.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 20-02-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## ஐ.தே.கட்சியின் அச்சம்!

"அவசர காலச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் எதிர் காலத்தில் விபரீதமான விளைவுகள் ஏற்படலாம்." என்ற ஐக்கிய தேசியக் கட்சியின் எச்சரிக்கையில் தவறேதும் இல்லை. அதாவது அவசரகாலச் சட்டம் என்பது ஒருவகையில் ஒடுக்கு முறைச்சட்டம் ஒன்றே.

ஏனெனில் மனித உரிமைகளுக்கு மாறானஅனுமதியை ஆயுதப் படைக்கு இச்சட்டமே கொடுக்கின்றது. இதுவே ஒடுக்கு முறைக்குத் தோற்றுவாய் போன்றது. ஆகையினால் எதிர் காலத்தில் இச்சட்டத்தினால் பாரதூரமான விளைவுகள் ஏற்படலாம். அதாவது இச்சட்டத்தை அரசாங்கம் தனது தேவைக்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.

இதற்கு இலங்கையின் கடந்த கால வரலாற்றில் நிரம்பவே படிப்பினை உண்டு. தமிழ் மக்களின் போராட்டங்களை ஒடுக்கவெனக் கொண்டு வரப்பட்ட ஒவ்வொரு சட்டமும் இறுதியில் சிங்கள மக்களையும், சிங்கள அரசியல்வாதிகளையும் ஒடுக்கவும் பயன்படுத்தப்பட்டது. இதனை சிறிலங்கா ஆட்சித்தலைவர்கள் அனைவருமே செய்துள்ளனர்.

அதாவது உருவாக்கப்படும், பிரகடனப்படுத்தப்படும் சட்டங்கள் தனியாக தமிழ் மக்களுக்கு எதிரானதென உருவாக்கப்படுவதில்லை. அவை நாட்டிற்கானது என்ற ரீதியிலேயே உருவாக்கப்படுகின்றன. ஆகையினால் இச்சட்டங்களில் சிங்களவர்களும் சிக்குதல் தவிர்க்க முடியாது.

இந்நிலையில் தற்பொழுது அமுல்படுத்தப்பட்டுள்ள அவசர காலச்சட்டமும், தென்னிலங்கையில் அரசிற்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை அடக்கி ஒடுக்குவதற்கு பயன்படுத்தப்படும் வாய்ப்புக்கள் இல்லாமல் இல்லை. அதிலும் ஐ.தே.கட்சி இவ்விடயத்தில் தற்பொழுது அக்கறை கொண்டுள்ளதற்கும் காரணம் உண்டு.

இன்றைய அரசியற் சூழ்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்து இருவிடயங்களில் அது தீவிர அக்கறை செலுத்த வேண்டியுள்ளது. இதில் ஒன்று எஸ்.பி.திஸாநாயக்கவின் விடுதலைகள் தொடர்பாக ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் இது சுனாமிப் பேரலை அனர்த்தத்தால் இடைநிறுத்தப்பட்டது.

ஆனால் எஸ்.பி.திஸாநாயக்கவின் விடுதலை தொடர்பாக இனிப் போராட்டம் நடத்தவேண்டிய தேவை ஐ.தே.கட்சிக்கு எழுந்துள்ளது. கடந்த சுதந்திர தினத்தின்போது எஸ்.பி.திஸாநாய்க்க பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டபோதும் எஸ்.பி. விடுதலை செய்யப்படவில்லை. இந்நிலையில் எஸ்.பி.திஸாநரயக்கவைத் தொடர்ந்தும் சிறையில் இருக்க விடுவது ஐ.தே.க விற்கு பெரும் கௌரவக் குறைவாகவே இருக்கும். இத்தோடு எஸ்.பி.திஸாநாயக்கவும் குழப்பத்திற்கு உள்ளாகக் கூடும்.

அடுத்ததாக சனாதிபதிக்கான தேர்தல் இவ்வாண்டின் இறுதியில் நடத்த வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி கூறி வருகின்றது. அரசியல் யாப்பின் பிரகாரம் அதுவே சரியானதெனவும் அது கூறுகின்றது. ஆனால் சனாதிபதி சந்திரிகாவோ அன்றி அவரது சகாக்களோ அடுத்த ஆண்டின் இறுதியில்தான் சனாதிபதித் தேர்தல் என்கின்றனர் . சனாதிபதி சந்திரிகாவோ இரண்டாவது பதவிக் காலத்திற்கு இரு முறை சத்தியப்பிரமாணம் செய்ததாகக் கூறுகின்றார்.

இத்தகையதொரு நிலையில் ஐ.தே.கட்சி அரசிற்கெதிரான போராட்டங்களை நடத்த வேண்டியது தவிர்க்க முடியாததாகவே இருக்கும். அவ்வாறு ஐ.தே.கட்சி போராட்டங்களை நடத்துவதானால் அதற்கு எதிராக அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்த அரசாங்கம் தயங்கப்போவதில்லை. ஏனெனில் சனாதிபதி சந்திரிகா எத்தகைய நடவடிக்கைகளையும் துணிந்து மேற்கொள்ளும் ஆற்றல் மிக்கவர்.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியும் இவ் அவசர காலச் சட்டம் குறித்து தற்பொழுது கண்டனம் தெரிவிக்க முற்படுவதானது நாட்டின் நலனின் கருத்து எனக் கொள்வதற்கில்லை. ஏனெனில் நாட்டின் நலன் கருதியே மேற்கொள்ளப்படுவதாக இருப்பின் ஐக்கிய தேசியக் கட்சி அவசரகாலச் சட்டத்திற்கு எதிராகப் பாராளுமன்றத்தில் வாக்களித்து இருத்தல் வேண்டும். ஆனால் ஐ.தே.கட்சி வெளிநடப்புச் செய்ததே ஒழிய எதிர்த்து வாக்களிக்கவில்லை. எதிர்த்து வாக்களிக்காது விடுதல் என்பது பொதுவாக சட்ட மூலம் நிறைவேற ஒத்துழைப்பதாகவே இருக்கும்.

ஆனால்அவசரகாலசட்டம்நிறைவேறின் தமக்கு எதிராகவும் இச்சட்டம் பயன்படுத்தப்படலாம் என்பது ஐ.தே.கட்சிக்குத் தெரியாததல்ல ஆனால் அக்கட்சியின் பேரினவாதசிந்தனையும் , பேரினவாத்த்தின் கோபத்திற்கும், வெறுப்பிற்கும் ஆளாகி விடுதல் கூடாது என்ற அச்சமும் அவர்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளாது விலகியிருக்கக் காரணமாகும்.

சிங்கள ஆட்சியாளர்கள் அரசியற்கட்சிகள் காலத்திற்குக் காலம் தமிழ் மக்களுக்கு எதிரானதென்ற ரீதியில் ஒடுக்கு முறைச் சட்டங்களை அமுல் செய்வதுண்டு. ஆனால் இறுதியில் அவர்ளும் அச்சட்டங்களிற்குள் சிக்கிக் கொள்வதும் அதனால் சிரமப்படுவதும் உண்டு. தற்பொழுது அவசரகாலச் சட்டம் நிறைவேற்றுவதற்கு மறைமுகமாக உதவிய ஐ.தே.கட்சியும் அத்தகைதொரு சூழ்நிலை குறித்த அச்சத்தினாலேயே அவசரகாலச் சட்டம் குறித்து எச்சரிக்கை செய்ய வேண்டியதாகியுள்ளது.

# சுனாமி நிவாரணப் பொருட்களுக்கு சுங்கத்தீர்வை பாரதூரமானது

### –ஆசிய மனித உரிமைகள் அமைப்புக்கள் கருத்து

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்குக் கிடைக்கின்ற நிவாரணப்பொருட்களுக்கு சுங்கத்தீர்வை விதிக்கும் முறையானது பாரதூரமானது என ஆசிய மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது. ஆசிய மனித உரிமைகள் அமைப்பின் பணிப்பாளர் பசில் பெர்ணான்டோ இது குறித்து கருத்துரைக்கையில் வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் நிவாரண உதவிகளுக்கு வரி விதிக்கப்படும் செயலானது இலங்கை தொடர்பான நல்லெண்ணத்தை பாதிக்கக்கூடும். அத்துடன் இவ்வாறு வரி விதிக்கப்படும் செயலானது இந்த நிவாரணப் பொருட்கள் இலங்கைக்கு கிடைத்த பின்னர் விற்பனை செய்யப்படுவதாகவே அர்த்தப்படும் எனவே சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைக்கும் உதவி எதிர்காலத்தில் கிடைக்காமல் போகக்கூடும். எனவே இதனை சனாதிபதியும், பிரதமரும் இணைந்து தடுக்கவேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வரும் நிவாரணங்களுக்கு முதலில் அரசாங்கம் சுங்கத்தீர்வையை விதிக்கவில்லை எனினும் பின்னர் அது அவசிய மருத்துவப்பொருட்கள் மற்றும் பால்மா தவிர்ந்த நிவாரணப்பொருட்களுக்கு சுங்கத்தீர்வையை விதித்தமை குறிப்பிடத்தக்கது. (32)

# அரசின் சிறு தவறுகளையும் ஊடகங்கள் பெரிதுபடுத்தி பிரச்சாரம் செய்கின்றன

### -சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சாடல்

ஊடகவியலாளர்கள் எதிர்கட்சிகள் மீது சனாதிபதி தனது கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளார். சிறிய தவறுகளையும், பிழைகளையும் முதன்மைப்படுத்தி அரசிற்கு எதிரான பிரச்சாரங்களில் ஈடுபடுவதாக குற்றம் சாட்டியுள்ளார். குறிப்பாக உள்ளூர் பத்திரிகைகள் தன்மீது வேண்டும் என்றே குற்றம் சாட்டுகின்றன எனவும் அதனால் தான் உள்ளூர் பத்திரிகைகளை வாசிப்பதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

தாம் செய்யும் நல்ல காரியங்களை இவ் ஊடகங்கள் மூடி மறைத்து விடுவதாகவும் ஆனால் சிறிய பிழை ஏற்பட்டாலும், அதனைப் பெரிதுபடுத்திப் பிரச்சாரங்களை மேற்கொள்வதாகவும் அவர் கூறினார். (32)

# சனாதிபதியின் கடிதத்திற்குப் பதிலளிக்க ஜே.வி.பி அரசியல்பீடம் தீர்மானம்

(கொழும்பு)

ஜே.வி.பிக்கு சனாதிபதியால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்திற்குப் பதில் கடிதத்தை அனுப்பிவைக்க ஜே.வி.பியின் அரசியல் பீடம் தீர்மானித்துள்ளது. நிட்டம்புவவில் சனாதிபதியால் நடாத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் நிகழ்த்தப்பட்ட உரையை அடுத்து அரசுக்கும், ஜே.வி.பி.க்கும் இடையில் முறுகல் நிலை தோன்றியது. ஆளும் கட்சிக்குள் ஏற்பட்ட இந்த முரண்பாட்டு நிலையை தீர்ப்பதற்கு பிரதி அமைச்சர்களின் ஒன்றியம் சனாதிபதியுடன் பேச்சுவார்த்தை ஒன்றை நிகழ்த்தியதன் விளைவாக சனாதிபதியினால் ஜே.வி.பி.க்கு கடிதம் ஒன்று எழுதப்பட்டது. இந்தக்கடிதத்தில் உள்ள முக்கிய விடயங்கள் தொடர்பாக தமது தரப்பு விளக்கங்களை அளிக்கும் வகையில் தனது கடிதத்தினை ஜே.வி.பி அனுப்பியுள்ளதாக தெரியவருகிறது.(32)

# அவரைப் பருப்பை உட்கொண்ட 108 பேர் வைத்தியசாலையில் அனுமதி

இந்திய தொண்டர் நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட அவரைப் பருப்பை உட்கொண்ட 108 பேர் வாந்தி மற்றும் வயிற்றோட்டம் காரணமாக கல்முனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

கல்முனை, பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலயம் அகதி முகாமில் தங்கியிருக்கும் அகதிகளே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களாவார்கள். அவித்து சாப்பிடும் படி கூறி வழங்கப்பட்ட இந்த அவரைப் பருப்பு சுவையாக இருந்த காரணத்தினால் இவர்கள் பச்சையாகவும் அரை அவியலிலும் சாப்பிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.குழந்தைகள் உட்பட 108 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும் நேற்று நண்பகல் கிடைத்த தகவலின் படி சுமார் 30 குழந்தைகள் மட்டும் தற்போது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடலிலிருந்து 100 மீற்றருக்கு தடை மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும்

### -பிரதமர் மகிந்த ராஜபக்ஷ

கடற்கரையில் இருந்து 100 மீற்றர் எல்லைக்குள் நிர்மாணப் பணிகளைத் தடை செய்வது தொடர்பாக அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்தினால் கடலை அண்டித் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு பாதிப்புக்கள் ஏற்படுவதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

அம்பலாந்தோட்டை உடப்பிற்றகொட பிரதேசத்தில் வீடமைப்புத் தொகுதிக்கான அடிக்கல் நாட்டு வைபத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு கூறினர். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த 100 மீற்றர் பிரச்சினை தொடர்ந்தும் உள்ளது. அரசாங்கம் ஒரு தீர்மானத்தை எடுத்தால் நாம் அரசாங்கம் எடுத்த அந்தத் தீமானத்திலேயே தங்கியுள்ளோம் நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டலும் தனிப்பட்ட கருத்துக்களுக்கு இடமில்லை பல்வேறு யோசனைகள் எழுகின்றன.

இந்த விடயங்கள் குறித்தும் நாம் கருத்தில் கொள்வோம். இருப்பினும் மறுபடியும் கடலுக்கு பயந்து அங்கிருந்து வெளியேறக் கூடிய வாய்ப்பும் எமக்கில்லை சில நாடுகளில் மக்கள் இன்று கடல் நோக்கி முன்னேறிக் கொணடிருக்கின்றனர். இந்த விடயம் குறித்தும் நாம் கவனம் செலுத்த வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்தியாவிலிருந்து படகு மூலம் 26 அகதிகள் தலைமன்னார் வருகை

இந்தியாவிலிருந்து படகுகள் மூலம் இலங்கைக்கு வந்த 26 அகதிகள் தலைமன்னார் பொலிசாரினால் மாவட்ட பதில் நீதவான் முன்நிலையில் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர்.

இதனையடுத்து இவர்களில் 25 அகதிகளை விடுவிக்குமாறு மாவட்ட பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.தலை மன்னார் கடற்பகுதிக்கு வந்தடைந்த இந்த அகதிகளில் ஒருவரை சந்தேகத்தின் பேரில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன் ஏனையோரை அவர்களது சொந்த இடங்களுக்கு செல்ல அனுமதிக்குமாறும் தெரிவிக்கப்பட்டது. இவர்கள் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# "உடும்பன்குளம்" படுகொலையின் 19 ஆவது நினைவு நாள் கடைப்பிடிப்பு

அம்பாறை மாவட்டம் "உடும்பன்குளம்" இனப் படுகொலையின் 19 ஆவது நினைவு நாள் நேற்று திருக்கோவில் பிரதேசத்தில் உணர்வு பூர்வமாக கடைப்பிடிக்கப் பட்டது.

1986 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி இரவு உடும்பன்குளம் பிரதேசத்தில் வேளாண்மை சூடு மிதிப்பில் ஈடு பட்டுக் கொண்டிருந்த 135 தமிழர் கள் சிறிலங்கா விசேட அதிரடிப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டு தீ வைத்து எரிக்கப்பட்டார்கள். இப்படுகொலையின் நினைவாக நேற்று திருக்கோவில் பிரதேசத்தில் மக்கள் கலந்து கொண்ட ஊர்வலமொன்று நடைபெற்றது. திருக்கோவில் சந்தியிலிருந்து நாட்டுப்பற்றாளர் சதுக்கம் வரை நடைபெற்ற இந்த ஊர்வலத்தில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டனர். ஊர்வலத்தின் முடிவில் நினைவு தினக் கூட்ட மொன்றும் நடைபெற்றது.

# சுனாமி மீள்கட்டுமானப் பணிக்கு மணல் விநியோகிக்க நடவடிக்கை

சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களை மீளக்குடியமர்த்தல் மற்றும் அவர்களின் அடிப்படை உட்கட்டுமான வசதிகளை ஏற்படுத்துவதற்கும் மீள்புனர்நிர்மாண வேலைகளை மேற்கொண்டுள்ள தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள் மற்றும் அரச ஒப்பந்த அடிப்படையில் மீள்கட்டுமானம், அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொண்டுள்ள நிறுவனங்களுக்கும் தேவைப்படும் மணலைக் குடத்தனையிலிருந்து வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு நிறுவனம் மூலம் நாளை திங்கட்கிழமை முதல் மீண்டும் விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் யாழ்.அரசாங்க அதிபரினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மணல் தேவைப்படும் மேற்குறிப்பிடப்பட்ட நிறுவனங்களை மாவட்டச் செயலகத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர் தலைமைப்பீடத்துடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ்.அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

# சுனாமி நிவாரணப் பொருட்களுடன் வந்த காலணிகள் சுங்க அதிகாரிகளால் தடுத்து வைப்பு

சுனாமி நிவாரணமாக இறக்குமதி செய்யப்பட்ட காலணித் தொகுதிகள் ஒன்று சுங்க அதிகாரிகளினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. நிதியமைச்சு அண்மையில் தங்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைக்கமைய இந்தக் காலணித் தொகுதியை தடுத்து வைத்ததாக சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

குளிரூட்டிகள், புகைப்படப் பிரதியெடுக்கும் இயந்திரங்கள் ஒலிபெருக்கிகள் ஆகியனவும் சுனாமி நிவாரணம் என்ற போர்வையில் இறக்குமதி செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

ஊடகவியலாளர் சிலர் நேற்று சுங்கப் பகுதிக்கு விஜயம் செய்த போது அதிகாரிகள் இது பற்றித் தெரிவித்தார்கள். பல்வேறு நிறுவனங்களினால் சுனாமி நிவாரணம் என்று இறக்குமதி செய்யப்பட்ட இராணுவ அதிகாரிகள் பயன்படுத்தும் சீருடைகள், காலணிகள், விசேட உணவுப் பொருட்கள் என்பனவும் கண்டுபிடிக்கப்பட்டு சுங்கப் பகுதியில் உள்ள கடற்படைப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

சுனாமி நிவாரணம் என்ற போர்வையில் வரும் பல பொருட்கள் தனிப்பட்டவர்கள் சிலரும் சில நிறுவனங்களும் இறக்குமதி செய்து வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட முன் பள்ளி ஆசிரியர்களுக்கு ஈருருளி வழங்கும் நிகழ்வு

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப் பெற்ற முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஈருருளி வழங்கலும் சாவடைந்த முன்பள்ளி ஆசிரியர் குடும்பங்களுக்கு உதவு தொகை வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் 23ஆம் நாள் நடைபெறவுள்ளது.

முல்லை மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தினால் சாவடைந்த முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்களின் 60ஆம் நாள் நினைவு தினத்தை முன்னிட்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் நோர்வே தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதியுதவியில் வடக்கு கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தினரால் சுனாமியில் சிக்குண்டு சாவடைந்த முன்பள்ளி ஆசிரியர்களுக்கு உதவித் தொகை வழங்குதலும், ஏனைய பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு ஈருருளி வழங்கல் நிகழ்வும் தமிழர் புனர்வாழ்வுக் கழக முல்லை மாவட்ட செயலகத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

# சுயதொழில் கடனுதவி குறித்து கண்டாவளை பிரதேசத்தில் கலந்துரையாடல்

(கண்டாவளை)

கண்டாவளை பிரதேசத்தில் கணவனை இழந்து பெண்களை குடும்பத் தலைவர்களாகக் கொண்ட பெண்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 22 ஆம் திகதி பி.ப2.00 மணிக்கு கண்டாவளை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. கணவனை இழந்து தவிக்கும் குடும்பங்களின் பொருளாதாரத்தை உயர்த்தும் நோக்குடன் பல சுயதொழில் கடன் உதவிகள் பற்றி கலந்துரையாடப்படவுள்ளதால் கும்பப் பெண்களை இக்கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர் சி.சத்தியசீலன் கேட்டுள்ளார். (14)

# இடம்பெயர் சேவை

அடையாள அட்டை வழங்கும் இடம்பெயர் சேவை இன்று பூநகரி பிரதேச செயலாளர் செயலகத்தில் நடைபெறவுள்ளது. 16 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் தத்தமது கிராமசேவகருடன் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை அனுப்பி அடையாள அட்டையை பெற்றுக் கொள்ளலாம். (34)

# கூட்டம் பிற்போடல்

தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவை முல்லை மாவட்ட பொதுக்கூட்டம் எதிர்வரும் 23.02.2005 ஆம் நாள் நடைபெறவிருந்தது. தவிர்க்க முடியாத காரணங்களினால் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது. கூட்டம் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும் என முல்லை மாவட்ட கல்வி மேம்பாட்டு பேரவை செயலாளர் இராகேஸ்வரர் தெரியப்படுத்தியுள்ளார்.

-சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையால்-

# உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் அமைக்கப்பட்ட கட்டடம் திறப்பு

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினால் உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் அமைக்கப்பட்ட கட்டடத் திறப்பு விழா நாளை காலை 9 மணிக்கு தொழில்நுட்ப நிறுவன இயக்குனர் இராஜரட்ணம் தலைமையில் இடம் பெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பருதி, யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி. கலைவிழி, பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர் எனவே இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவன சமுகத்தினரும், சர்வதேச தமிழீழ மாணவர் பேவையினரும் கேட்டுக் கொள்கின்றனர். (36)

# கண்டாவளைப் பிரதேசத்தில் நெல் அறுவடைக்கு ஆள்தட்டுப்பாடு நெற்செய்கையாளர் பாதிப்பு

கண்டாவளைப் பிரதேசத்தில் நெல் அறுவடை மும்முரமாக நடைபெறத் தொடங்கியுள்ளது. இங்கு அறுவடை செய்வதற்கு கூலியாட்கள் தட்டுப்பாட்டால் அறுவடை வேலைகளை விவசாயிகள் உரிய பருவத்தில் மேற்கொள்ள முடியாததால் அறுவடைக்கு தயாரான நெல் வயல்கள் கடும் பாதிப்புக்குள்ளாகி வருகிறது. கூலியாட்கள் தட்டுப்பாட்டை பயன்படுத்தி அதிகரித்த சம்பளப் பணம் கேட்கின்றனர். இதனால் பெருமளவு விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். (14)

# சனாதிபதிக்குப் பதில் பிரதமர் மட்டு.விஜயம்

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இன்று மட்டக்களப்பிற்கு விஜயம் மேற்கொள்ளவிருக்கின்றார். சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கொள்ளவிருந்த விஜயம் ரத்து செய்யப்பட்டதையடுத்தே அவரது சார்பில் பிரதமர் மட்டக்களப்பு செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (32)

# இருளில் மூழ்கும் பூநகரி வைத்தியசாலை

(பூநகரி)

கடந்த சில நாட்களாக பூநகரி வைத்தியசாலையின் மின்பிறப்பாக்கி செயற்படவில்லை. இதனால் இரவில் வைத்தியசாலை இருளில் மூழ்கியுள்ளது. அவசர சிகிச்சைக்காக இரவு வரும் நோயாளிகளை பராமரிப்பது மிகவும் கஷ்ரமாக இருக்கின்றது. அத்துடன் பாம்புக்கடிக்கு உரிய சிகிச்சை வசதிகள் இங்கு இல்லை. இதனால் பாதிக்கப்படுவோர் கிளிநொச்சிக்குச் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது என மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (34)

## மன்னார்...

பட்டதுடன் அவர்களுடன் படையினர் வாக்குவாதத்திலும் ஈடுபட்டனர். இந்நிகழ்வில் வலயக்கல்விப் பணிப்பாளர், கோட்டக்கல்விப் பணிப்பாளர், திட்டப்பணிப்பாளர், நானாட்டான் பிரதேச செயலாளர் ஆகியோர் கலந்து கொண்ட போதிலும் மாணவர், பெற்றோர் மீதான உடற்சோதனைக்கு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. மேலும் இந்நிகழ்விற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழ் கூட்டமைப்பினர் அழைக்கப்பட்டிருந்த போதும் எவரும் கலந்து கொள்ளவில்லை. இப்பாடசாலை நிகழ்விற்கு இவ்வாறான வேண்டப்படாத செயற்பாடுகளை மேற்கொண்டமைக்காவும், மாணவர்கள் உடற்சோதனைக்கு உட்படுத்தப்பட்டமைக்காவும் மன்னார் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் தொழிற சங்க இணையம், மக்கள் அமைப்புக்கள், தமிழ் மாணவர் ஒன்றியம் என்பன கடுமையான கண்டனத்தை தெரிவிக்கின்றன.

## மனைவியை...

பிள்ளையின் தாயாரான 21 வயதுடைய ரதீஸ்குமார் சந்திரலேகா என்பவரின் உடல் பிரேத பரிசோதனைக்காக புதுக்குடியிருப்பு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. (ச.46)

## சுனாமியால்...

16500 கோடி ரூபா மீதமாக இருக்கும்.

இந்த நிலையில் அரசாங்கம் சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக வீடுகளை அமைக்கப் போவதாக கூறி அரச ஊழியர்களிடம் இருந்து நிதி வசூலிப்பது ஏற்றுக்கொள்ளமுடியாதது.

இதனைத் தவிர பொலிசார் சில இடங்களில் சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளை அமைக்கவேண்டும் என்பதற்காக நிதிகளை கோரி வருகின்றனர்.

சமுர்த்தி உத்தியோகத்தர்களும் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் இவ்வாறான நடவடிக்கைகள் கண்டிக்கத்தக்கவை எனத் தெரிவித்தார்.

இதேவேளை இது குறித்து நிதியமைச்சர் சரத் அமுனுகமவிடம் வினாவியபோது குற்றச்சாட்டை அவர் மறுத்துரைத்தார்.

அரசாங்கம் எந்த ஒரு இடத்திலும் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை.

பௌத்த மத பண்புகளுக்கு அமைய இவ்வாறான உதவிகளை அரசாங்க ஊழியர்கள் தாமாகவே முன்வந்து வழங்குகிறார்கள்

எனவே ஜாதிக ஹெல உறுமயவின் குற்றச்சாட்டு உண்மைக்கு புறம்பானதாகும் எனக்குறிப்பிட்டார். (32)

## சென்னையில்...

பிட்ட கப்பல் வர்த்தகர்கள் கொண்டிருந்ததாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

எனவே கப்பலிலிருந்து ஐவரைக்கைது செய்த காவல் துறையினர். இலங்கையில் அழைத்து வரப்பட்ட 8 பேரும் யார் என்ற விசாரணைகளில் ஈடுபட்டுள்ளார்கள். (32)

## அரசியலை....

சனாதிபதிக்கு இருந்தது. இதன் பின்னர் எல்லோரையும் சேர்த்துக் கொண்டு சுனாமி அழிவிலிருந்து மீளுவதற்கான சர்ந்தர்ப்பத்தை உருவாக்கியிருக்கலாம். மறுபுறம் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேசி அவர்களுடன் இணைந்து நிவாரணப் பணிகளைச் செய்திருக்கலாம். அரசியல் கட்சிகளை இணைத்திருக்கலாம். அரசசார்பற்ற அமைப்புக்களை ஒன்று சேர்த்திருக்கலாம், அனைவரையும் இணைத்துக் கொண்டு ஒருங்கிணைந்த அரசியலைச் செய்திருக்கலாம். எனினும் இவற்றைச் செய்யவில்லை. ஏனெனில் ஐக்கிய தேசியக் கட்சியை எதிர்க் கட்சியாகப் பார்க்காமல் எதிரான அரசியலாகக் கருதியதால் இதனைச் செய்ய முடியாமல் போனது ஒருங்கிணைந்த அரசியலுக்காக தமது கட்சி தயாராக இருந்ததாகவும் தெரிவித்த அவர் சுனாமி நடவடிக்கைகளில் செயற்படுமாறு நாங்கள் சனாதிபதிக்கு கூறினோம். ஆறு மாதங்களுக்கு முன்னின்று செயற்பட நாமும் தயார் என்று கூறினோம். இப்போது ஐக்கிய தேசிக் கட்சிக்கு அரசாங்க தரப்பினரே பேசுகின்றார்கள். அப்படியானால் இந்த ஒருங்கிணைந்த அரசியலைச் செய்வதற்கென சர்ந்தர்ப்பம் இல்லாமல் போகின்றதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது